தென்மொழி

தூய்தமிழ்க்கும் இனத்திற்குந் தொண்டாற்றும் அன்பரெவர்?

அரசியலைச் சார்ந்தோர்கள்
அருந்தமிழ்க்கும் இனத்திற்கும்
ஆக்கம் எண்ணார்;
முரசறைதல் பெரிதாக
இருந்தாலும் பதவிநலம்
முதலாய்க் கொள்வார்!
கரிசனமாய்த் தமிழ்கற்ற
புலவோரும் அறிஞர்களும்
கற்ற வற்றால்
பரிசளிப்பும் பாராட்டும்
பலவெண்ணும் தம்நலமே
பார்த்திருப்பார்!

வாணிகர்க்குப் பொருள் நாட்டம்!
வாழ்கலைஞர் எல்லார்க்கும்
வருவாய் நோக்கம்!
காணியுழும் உழவர்க்குக்
கனித்தமிழும் இனநலமும்
கரும்பா? நெல்லா?
ஏணியெனும் பொருளியலால்
ஏற்றம்நினை தொழிலாளர்க்
கினமா கொள்கை?
தூணிகர்க்கும் அன்பரெவர்
தூய்தமிழ்க்கும் இனத்திற்கும்
தொண்டாற் றற்கே?

சுவடி : 25
ஓலை : 5

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை:
உருபா: 2-0

Scanned with CamScanner

நமக்கு வந்த மடல்கள்.

○ : 1387 : இன்பத் தமிழ் மொழிக்கு ஏற்றம் தர வந்த இனிய தமிழ்ப் பாவலரேறு ஐயா!

உங்கள் பாவரிகளும், உரை வரிகளும் தமிழுக்குப் புத்துணர் வூட்டவல்லன. ஒவ்வொரு திங்களும் வெளி வருகின்ற தென்மொழி, தமிழ்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய மூவிதழ்களுமே சான்று பகர்வன என்பதை இவ்விதழ்களைப் பயில்வோர் உணர்வர். அவை ஒவ்வொன்றையும் சுவைத்துச் சுவைத்து உரைக்கும் உரை இவை.

தென்மொழி சுவடி 25 ஓலை 4-இன் ஆசிரிய உரையும்—இதற்கு முன் ''தமிழாசிரியர்களே தமிழுக்குப் பகை'' எனும் கட்டுரையும் பொய்யுரையன்று. மெய்யுரையே. இக்கால் புற்றீசல் போல் கிளம்பி வரும் புதுத் தமிழ் ஆசிரியர்கள், வெறும் குறிப்புரையை மட்டும் பயின்று அல்லது கையூட்டுத் தந்து பட்டம் பெற்றுப் போலிப் புலவர்களாகப் பீடுநடை போட்டு உலா வருகின்றனர்கள்; அவர்களிடம் எங்ஙனம் உண்மையான தமிழ் உணர்வு உண்டாகும்? எவ்வாறு மாணவர்களுக்குத் தமிழ் உணர்வை ஊட்டுவர்?

மற்று, முழுமையாகக் கல்லூரியில் முறையாகப் பயின்றவர்களின் கதையும் இதுவே! அவர்களும் முழுமையாகச் செய்யுள்களை மனப்பாடம் செய்யச் சொல்வதில்லை. திருக்குறளையேகூட மனப்பாடப் பகுதிகளை மட்டுமே மனப்பாடம் செய்யச் சொல்கின்றனர். அவ்வாறு பயின்றால் தமிழின் இனிமையும் மேன்மையும் அவர்களுக்கு எங்ஙனம் விளங்கும்? தமிழ் உணர்வு எங்கு சுரக்கும்?

இக்கால மாணவர்களையோ சொல்லவே வேண்டுவதில்லை. அவர்கள் எவ்வாறேனும் தேர்வில் வெற்றி பெற்றால் போதும்; மதிப்பெண் வாங்கினால் சரி என இருக்கின்றனர்கள் பெற்றோர்களும்.

உங்கள் அன்பின், —மு. தமிழ்நெஞ்சன், துறையூர்.

○ : 1388 : இன நலம் போற்றும் இனிய வேந்தரே, எண்ணிலா வணக்கம்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு ஆகியவற்றின் நலனுக்கும் வளனுக்கும் பாடுபட்டு வருகின்ற தாளிகைக்குத் தமிழர் திருநாள் தோறும் நூறு உருபா நன்கொடை வழங்கல் வேண்டும் என்பது எங்கள் குடும்பக் குறிக்கோள்.

அதன்படி திருவள்ளுவர் ஆண்டு 2021 (1990) ஆம் ஆண்டின் தமிழர் திருநாளுக்கு உரிய நன்கொடை நூறு உருபாயைத் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய தாளிகைகளுக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பெறுகிறது. தீர்மானித்தபடி நன்கொடை நூறு உருபாயை இன்று பண அஞ்சல் (M. O.) வழி அனுப்பியுள்ளேன்.

தமிழ்ச்சிட்டு (குரல் 20 இசை 6) இதழில் வெளிவந்துள்ள ''தமிழ்ச் சிறுவர்களே! தாய்மொழிப் பற்றையும் தமிழினப் பற்றையும் வளர்த்துக் கொள்ளுங்கள்!' என்னும் ஆசிரிய உரையை-அருமையான அற உரையை—அறிவுரையை 50 காசு விலையில் தனி நூலாக வெளியிடத் திருக்கழுக்குன்றம் பாவலர்

பன்மொழிப் புலவர்

அப்பாத்துரையார் குடும்பத்திற்கு அருள் கனிந்து உதவுங்கள்!

பேரன்பினிய பெருந்தமிழ் நெஞ்சங்களே!

வணக்கம். அண்மையில் காலஞ்சென்ற பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் பற்றித் தென்மொழியில் ஏற்கனவே அவர் மறைவுக் குறித்த (சுவடி 25 ஓலை 1) ஆசிரியவுரையில் மிகத் தெளிவாகவும், அவர் குடும்பம் பற்றி மிக உண்மையாகவும் பல செய்திகளை எழுதியுள்ளேன்.

தமிழகத்துத் தோன்றிய சிறந்த பெருந்தமிழறிஞர்களுள் நம் அப்பாத்துரையார் மிகச் சிறந்த பேரறிஞரும், தமிழ், தமிழின, தமிழகக் காப்பாளருமாவார். தாமுண்டு தாம் கற்ற தமிழுண்டு, என்று எண்ணி, அத்தமிழொடு சேர்ந்த பெரும்புலமையை வைத்து வாணிகம் நடத்திப் பெரும் பொருள் ஈட்டி, நலமும் வளமும் சேர்ந்த வாழ்க்கை நடத்தாமல், தன்மானத்துடனும் அதனினும் ஓங்கிய இனமானத்துடனும், கட்டுப்பாடும் கடமையுணர்வும் நிறைந்த கொள்கை வாழ்க்கை நடத்தி, இறுதிவரை நலிந்தும் மெலிந்தும் போனவர் நம் பன்மொழிப் புலவர். அதனால் அவர்க்குப் பின்னர் அவர் குடும்பத்தையும் ஏதிலியாக விட்டுச் சென்றவர். இந்த ஏதுங் கெட்ட அடிமைத் தமிழகத்தில் அறிவுத்தொண்டும் இனத்தொண்டும் உண்மையான நெஞ்சுரத்துடன் ஆற்ற முயன்றார்க்கும் முயல்வார்க்கும் என்ன முடிவு நேர்ந்ததோ, நேருமோ, அந்த முடிவுக்கு இலக்காகி, இறுதிவரை ஆராத் துயருற்றுக் கால வெள்ளத்துள் கரைந்துபோனார் அப் பெரும் புலவர் பெருமகனார். இனி, அவர்க்குப் பின்னர் அவர் குடும்பமோ துன்பத் துயரக் கடலுள் வறுமைப் புயலுக்கிடையில் திசைமாறிய கட்டுமரம் போல் அலைக்கழியலுற்று அன்றாட வாழ்விற்கே அல்லல்பட்டு வாடிக் கிடக்கிறது. தமிழ், தமிழர் என்று கடைசி வரை கத்திச் சோர்ந்த அப்பெரும் புலமைப் பேற்றின் பிறங்கடைகள் நம் கண் முன்னரே இன்மைப்பாடு எய்தி வாழ்வின் இறுதி நோக்கிப் போய்க் கொண்டிருக்கின்றன!

அவ்வறிஞரின் துணைவியார் திருவாட்டி அலர்மேல் அப்பாத்துரையார் அரசியல் தந்நலம் மிக்கவரால் நலம் உறிஞ்சித் துப்பியெறியப் பெற்ற, நரம்பும் நாரும் சுண்டிக் காய்ந்துபோன ஓர் ஒற்றைப் பனங்கொட்டை! மக்கட்பேறற்ற அப்பாத்துரையார் இணையருக்கு ஓர் ஆணும் இரண்டு பெண்களும் வளர்ப்புப் பிள்ளைகள். இருபெண்களுள் மூத்த பெண் மல்லிகா தந்தைக்கு முன்னரே கண்களை மூடிக்கொண்டது. இரண்டாவது பெண் செல்வி இக்கால் தன் கணவனொடும் இரண்டு குழந்தைகளொடும், தன் அக்காளின் இரண்டு குழந்தைகளொடும், தன் தாயாருடனும் நாளொரு துயரமும் பொழுதொரு துன்பமும் ஆக, மிக மிக இடர்ப்பாட்டுடன் நாள்களைக் கடத்தி வருகின்றது; நகை முகத்தைத் தவிர வேறு நகை

நட்டறியாத தண்டமிழ்ப் பெண் செல்வி, தன் ஒண்டமிழ்ப் புலமைத் தந்தையின் பெயரைச் சொல்லிச் சொல்லி வாயூறும் தமிழ் எச்சிலை விழுங்கி விழுங்கி வயிறுநிறுகிறது. அதனைச் சுற்றி நிற்கும் அதனுடையவும் அதன் அக்காளுடையவும் குழந்தைகளும், நோய் மென்று தின்னும் அலர்மேல் அன்னையுமோ, எங்கிருந்தேனும் 'உதவி' என்றோர் இன்குரல் கேளாதா என்று ஏக்கப் பெருமூச்சால் தாக்கமுற்று வாழாமல் வாழ்ந்து வருகின்றனர்.

இந்த ஏழைப் புலவர் பிறங்கடையர்க்கு வந்து வாய்த்த செல்வமெல்லாம் ஏறத்தாழ ஐந்து இலக்க உருபாக் கடன்களே! அலர்மேலு அன்னைக்கு அன்றைய நாளில், பெருநகராட்சி அளித்த ஒருமாடி வீட்டின் மேல் ஓர் இரண்டு இலக்கம்! வடநாட்டு வட்டிக் கடைக்காரனிடம் நகைகளின் மேல் ஓரிலக்கம்! வைப்பகங்களில் ஏறத்தாழ ஓரிலக்கம்! இவையன்றி அக்கம் பக்கத்துச் சில்லறை வாங்கல்கள்—என அனைத்தும் சேர்த்தால் இலக்கம் ஐந்துக்குப் பக்கம்! என்ன செய்வது, இவற்றை எவ்வாறு தீர்ப்பது என்ற எரிதுயரத்திலேயே புலவர் கண்களை மூடிக்கொண்டாரோ, என்னவோ?

இது தொடர்பாக, அவரை எரிதீயுக்கு எண்ணெயாய் ஊற்றிவிட்டு, அச்சாம்பலின் மேல் மூன்றும் நாள் கொஞ்சம் பாலையும் ஊற்றிவிட்டு, இத்தமிழகத்தை ஆளவந்த திரவிட மரபு ஆட்சி முதல்வர் கலைஞரை நான், பன்மொழிப் புலவரின் பேராசிரிய மாணவர் முனைவர் மெ. சுந்தரத்தை அழைத்துக் கொண்டு, ஒருநாள் நேரில் போய்ப் பார்த்து, அவரின் குடும்பம் விழுந்து கிடக்கும் வறுமைக்குழியிலிருந்து மீட்டெடுத்து உய்வு தரக் கெஞ்சிக் கேட்டேன், கலைஞர் இரங்காத நெஞ்சத்துடன் தாம் அக் குடும்பத்திற்குதவ விரும்பவில்லை என்று மறுத்துக் கூறித் திருப்பியனுப்பி விட்டார். தமிழ்க்கண் கொண்டு அவர் பார்க்க விரும்பவில்லையாம்! கட்சிக்கண் கொண்டுதான் அவர் பார்ப்பாராம்! உணர்த்திவிட்டார் கலைஞர்.

திருவள்ளுவரின் அரச இலக்கணம் ஈகை!

அஞ்சாமை ஈகை அறிவூக்கம் இந்நான்கும்
எஞ்சாமை வேந்தர்க் கியல்பு! (382)

இன்சொலால் ஈத்தளிக்க வல்லான் (387)

கொடை, அளி, செங்கோல், குடியோம்பல் நான்கும்
உடையானும் வேந்தர்க் கொளி. (390)

—அதுவும் அறிவுடையாரைப்—பெரியாரைப் போற்றிக் கொள்ளல் அரசர்க்குக் கடமை; பெருங்கடமை! கலைஞர் அக் கடமையைச் செய்து பெரியாரைப் பேணித் தமராக் கொண்டு, அழியாப் பெரும் பெயர் பெற்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யவில்லையே! என் செய்வது! அலர்மேல் அப்பாத்துரையார் செய்த கட்சி சார்ந்த தவறுகள். அறிஞர் அப்பாத்துரையார்க்குக் கலைஞர் இரட்டைத் தாழ்ப்பாள் போடும்படி செய்திருக்கலாம்! அவ்வாறானால் அவர் ஆற்றிய தமிழ்த் தொண்டுக்கும், அவர்க்-

Scanned with CamScanner

காகக் கலைஞரிடம் இரக்கம் கேட்டுத் தூது நடந்த நாம் செய்த தமிழ் உழைப்பிற்கும் என்னதான் மதிப்போ? தெரியவில்லை.

இனி, அதன் பின்னரும் எத்தனையோ பேரிடம் உதவி முயற்சிகள்! ஆனாலும் அவையெல்லாம் வெறும் நடைப் பயிற்சிகளாய்ப் போயின!

இறுதியில் இந்த முடிவுக்குத்தான் என்னால் வரமுடிந்தது! அப்பாத்துரையார் என்னும் அருந்தமிழ்ப் பேரறிஞர் நம் அன்னை மொழிக் குழைத்தவர்! ஐயமில்லை! அவர் நம் அரும்பெரும் இனத்திற்கு உழைத்தவர்! ஐயமில்லை! இப்பொழுதெல்லாம் நாம் எளிதாகச் சொல்லிச் சொல்லித் திருப்பாட்டுப் பாடுகிறோமே, அத் திராவிடப் பாடல் மரபின் ஆணிவேர் பக்கவேர்களை அறிந்து சொன்னவர்; அதிலும் நமக்கு அணுவளவும் ஐயமில்லை!

அவ்வாறானால். அவர் இன்று நம்மிடையில்லை: எனவே அவருக்குச் செய்வதை அவர் குடும்பத்திற்குத் தவறாமல் செய்வோம்! உதவுங்கள்! உதவுங்கள்! உற்றுழி உதவுங்கள்!

ஆதரவற்ற அப்பாத்துரையார் குடும்பத்திற்கு என ஆளுக்குக் கொஞ்சம்! முடிந்த அளவு! தவறாமல்! இன்று முதல்—கையில் கிடைத்த தொகையை—இன்றே கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி விட்டு, அருள் கனிந்து அச் செய்தியைத் தென்மொழிக்கு ஓர் அஞ்சல் அட்டை வழியாக, மறவாமல் தெரிவியுங்கள். தென்மொழியில் தொடர்ந்து பட்டியல் வரும்.

தென்மொழி அன்பர்கள், தமிழ்நிலம் அன்பர்கள், உலகத் தமிழின முன்னேற்றக் கழக அன்பர்கள் முதலியோர் மறவாமல் அனுப்பவேண்டிக் கொள்கிறேன்.

தமிழக அரசு செய்ய விரும்பாததைத் தமிழ் அன்பர்கள் செய்யட்டும்!

தொகை விடுக்க வேண்டிய முகவரி:
திருவாட்டி: அலர்மேலு அப்பாத்துரை,
10, அப்பாத்துரையார் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை-18,

அன்பன்
பெருஞ்சித்திரனார்.

மொழி உணர்வு!

மொழி உணர்வு இல்லாதவர்களுக்கு நாட்டு உணர்வோ, நாட்டு நினைவோ எப்படி வரும்? நம் பிற்கால வழிமுறையினர்க்காவது சிறிது நாட்டு உணர்வு ஏற்படும்படி செய்யவேண்டுமானாலும், மொழி உணர்வு சிறிதாவது இருந்தால்தான் முடியும். அன்றியும் குமுகாய உணர்வு சிறிதாவது இருக்கவேண்டுமானாலும் மொழி உணர்வு இருந்தால்தான் முடியும்.

—பெரியார் ஈ. வே. இரா.
'விடுதலை' 1952-ஆண்டு மலர்.

''கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை;'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில் எவரும் எதிர்நின்றே.

(நிறுவனம் தி. பி. 1990 (1959))

தென்மொழி

மொழி—இனம்—நாடு.

நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!

இந்தியா ஒன்றாக இருக்கும் வரை இந்து மதம் இருக்கும். இந்து மதம் இருக்கும் வரை தமிழர்களும் இந்துவாகவே இருக்க வேண்டும். தமிழர்கள் இந்துவாக இருக்கும்வரை மதப் பூசல்களும் குலக் கொடுமைகளும் அவர்களை விட்டு விலகவே முடியாது. மதப் பூசல்களும் குலக்கொடுமைகளும் அவர்களை விட்டு விலகாதவரை, ஆரியப் பார்ப்பனரின் வஞ்சகத்திலிருந்தும் மேலாளுமையினின்றும் தமிழன் மீளவே முடியாது. அத்தகைய பார்ப்பனீயப் பிடிப்புகளிலிருந்து தமிழன் மீளாதவரை, தமிழ் மொழி தூய்மையுறாது; தமிழினம் தலைதூக்காது; தமிழ்நாடு தன்னிறைவு அடைய முடியாது. எனவே, இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும், ஆரியப் பார்ப்பனியத்தினின்றும் விடுபட வேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும். ஆகவே, தமிழக விடுதலை தான் நம் முழுமூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என்று தமிழர் ஒவ்வொருவரும் உணர்தல் வேண்டும்.

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார். (தொலைபேசி : 847829)

சுவடி 25] ௨௦௨௧ சிலை-சுறவம் (சன-பிப் 90) [ஓலை: 5

தமிழறிஞர்களின் தமிழ்ப்பணி! - 2

இன்று தமிழக அமைச்சரவையில் மிகவும் உயர்பதவியில் உள்ள ஒருவர், அன்று கல்லூரி மாணவராயிருந்த பொழுது நமக்கெழுதியிருந்த மடலில், 'உலகிலேயே மூன்று தமிழறிஞர்கள்-தாம் இருக்கின்றனர்; ஒருவர் பாவாணர்; மற்றவர் நீங்கள் (அஃதாவது நாம்); மூன்றுமவர் நான் (அஃதாவது அவர்)''—என்று குறிப்பிட்டிருந்தார். அன்றைய நிலையில் அவர் பாவாணர் நூல்கள் சிலவற்றையும், தென்மொழியைச் சில காலமும் படித்திருந்த நிலையைத் தவிர, வேறு சிறப்பான தமிழ்க் கல்வியோ பட்டமோ பெறாத மாணவராக இருந்தார். அப்படிப்பட்ட நிலையிலேயே, அவர் தம்மை முழுத் தகுதி பெற்ற தமிழறிஞராகக் கருதிக் கொண்டது, நம் தாய்மொழியில் ஒரு சிறிது கற்றவுடனேயே, நம்மவர்கள் தங்களை எவ்வளவு அளவிறந்து மதிப்பிட்டுக் கொள்கின்றனர் என்பதைப் புலப்படுத்தியது. அன்றே அந்நிலை நம்மை மிகவும் வருத்தத்திற்குள்ளாக்கியது.

Scanned with CamScanner

நாம் விளையாட்டுக்காகவோ, மிகைப்படுத்தியோ கூறவில்லை; இன்றும் கூட அவரும் அவரையொத்த பேராசிரியர்கள் பலரும், ஒரு பக்கக் கட்டுரையைக் கூட தமிழில் பிழையின்றி எழுதிக் காட்டுவது இயலாததாகவே இருக்கிறது என்பதை மிகவும் வருத்தத்துடனும் வெட்கத்துடனும் இங்குக் குறிப்பிட வேண்டியுள்ளது. ஆங்கிலத்திலோ, வேறு மொழியிலோ இவ்வளவு இழிந்த நிலையில் அம் மொழி கற்றவர்கள் இருப்பதில்லை என்றே நாம் அறிந்த வரையில் உறுதியாய்க் கருதுகிறோம். ஆனால் தமிழில் மட்டும் ஒரு சிறு அளவில் கற்றவுடனேயே அவர்கள் தங்களைப் பெரிய புலவர்களாகவோ, அறிஞர்களாகவோ கருதிக் கொள்வது எப்படி நிகழ்கிறது என்றால், தமிழ் கல்லாத மற்றவர்களின் நிலை அவர்களின் மொழி நிலையைப் பார்க்கினும் மிகவும் இழிவானதாக இருக்கிறது என்பதாலேயே என்க. உண்மையைச் சொல்ல வேண்டுமானால், இன்று தமிழறிந்தவர்கள் ஒருவரையொருவர் அளவிறந்து பாராட்டிக் கொள்வதிலேயே, இவர்களின் தகுதி, திறமை, புலமையாற்றல் அனைத்தும் மதிப்பிட்டு விட முடிகிறது, என்றே நம்பிக் கொண்டிருக்கின்றனர். எல்லாரும் பாராட்டும் பொழுது ஒரு சிலர், அல்லது ஓரிருவர் மட்டும் பாராட்டாமற் போவது, அப்படியொன்றும் குறையோ குற்றமோ, இழுக்கோ, தகுதிக் குறைவோ ஏற்படுத்தி விடாது என்பதுதான் அத்தகைய அனைவரின் கருத்தாகவும் இருக்கிறது. அஃதாவது அறிவுத் தகுதிக்கும் 'பெரும்பான்மை' என்னும் குடிநாயக ஒப்போலை முறையே சரி என்றே இவர்கள் நினைக்கின்றனர் போலும்; தமிழகப் புலவர் குழுவில் அண்மையில் இடம் பெற்றுள்ள பாவலர் ஒருமுறை நம்மிடம், "நாங்களெல்லாம் தங்களைப் பல முறை இந்திரன் இந்திரன் என்று சொன்னால், நீங்கள் ஒருமுறையேனும் எங்களைச் சந்திரன் என்று கூட சொல்லக் கூடாதா? நாம் ஒருவரையொருவர் பாராட்டிக் கொண்டால்தானே, மக்கள் நம்மை மதிப்பார்கள்?'' என்று சொன்னார்; அதைக் கேட்டு நாம் அதிர்ச்சியும் வியப்பும் அடைய நேர்ந்தது.

இடைக் காலத்துத் தமிழ்ப் புலவரிடை எழுந்த இவ்வெற்றுப் பாராட்டுரையும் வீண் பகட்டுரையும் இன்னமும் அவர்களிடை மாய்ந்து போகவில்லை என்பதற்கு அடையாளமாக இன்றுள்ள வணிகத் தமிழறிஞர்களிடையில் அவர் போலியர் பலர் உளர். அதிகாரத்தில் உள்ளவர்கள் பலர் வெறும் புகழ்ச்சிக்கு இவ்வாறு அங்காந்து நிற்கையில்தான், சிலர் பதவிக்கும் பணத்துக்குமாகத் தங்கள் தமிழறிவையும், ஒருவாறான புலமையையும் அடகு வைப்பதற்கு என்றும் எப்பொழுதும் அணியமாக இருக்கின்றனர்.

அண்மையில் அடித்த அரசியல் புயலால், ஆலாய்ப் பறந்து கலைஞரின் கடைக்கண் பார்வையால் மேலே தூக்கப் பெற்று வானதிகாரக் கோபுரத்தில் ஏறிக் குந்திய தமிழறிஞர் ஒருவர், தம் தலைவருக்கு நன்றி கூறும் வகையில், 'தாம் தமிழில் பெரும் பட்டம் பெற்றுப் பெருங் கல்வி கற்றிருந்தாலும் அவையெல்லாம் பெறாத கலைஞரின் தமிழறிவுக்கு முன்னால், தாம் ஒரு சூழியம் ('அவர் சொல்லில் 'பூஜயம்')'' என்று சொன்னது இவ்வகையான

வஞ்சப் புகழ்ச்சியேயாம் என்றறிக. இனி, இவரை விடவும் இன்னொரு பகுத்தறிவுணர்வுள்ளதாகக் கூறிப் பெருமிதப் பட்டுக் கொள்ளும் பெரியார்ப் பற்றாளர் ஒருவர், முதல்வர் கலைஞர் அமர்ந்துள்ள மேடையில் தமக்கும் வாய்ப்புக் கிடைத்ததே என்ற உள்ளப் பூரிப்பால், தாம் உளறுவதும் என்னென்றும் தெரியாமல். ‘எல்லாரும் தமிழைத் தாய் என்றும், கன்னித் தமிழ் என்றும் பெண்ணாகத்தான் கற்பனை செய்து பார்த்திருக்கிறோம். தமிழை ஓர் ஆணாகக் கற்பனை செய்து பார்த்தால், அவ்வடிவம் கலைஞரைப் போலத்தான் இருக்கும்'' என்று கலைஞரின் செவி குளிரும்படி கூறித் தம் உச்சி குளிர்ந்தார்.

படித்தவர்கள், தாங்கள் தமிழில் படித்த அளவு அதிக மில்லையாயினும், பெரும்பாலார் மேடையேறி நன்றாகப் பேசக் கற்றுக் கொண்டனர். அவர்களின் பேச்சு அரசியல் தலைவர்கள் சிலரை நினைவூட்டுவதாக இருக்கிறதை நம்மில் பலரும் உணர்ந்திருப்போம். இழுத்தவாறு பேசுவது, விட்டுவிட்டுப் பேசுவது. ஒரு பொருளை உணர்த்தும் பல சொற்களை அவற்றின் நுண்ணிய வேறுபாடுகளை உணராமல், அடுக்கடுக்காக இணைத்துப் பேசுவது. (எ-டு அப்படி நான் கருதுவது-எண்ணுவது—நினைப்பது—விரும்புவது—என்னவென்றால் என்றவாறு பேசுவது), தேவையில்லாமல் விரித்துப் பேசுவது முதலியவாறு பேசுகின்றவர்கள் மிகுதியும் மலிந்துவிட்டார்கள்.

இனி, இலக்கியம் படித்தவர்களாகத் தங்களைப் பெரிதும் கருதிக் கொள்பவர்கள், இலக்கியப் பாடல்கள் ஒன்றிரண்டை மனப்பாடம் செய்து கொண்டு, அவற்றையே மேடை தோறும் திருப்பித் திருப்பி ஒப்பித்துத் தங்கள் புலமையைத் தம்பட்டம் அடிப்பவர்களாக ஆகிவிட்டார்கள். சிலர், நகைச்சுவையொடு பேசுவதாகத் தங்களைக் கருதிக் கொண்டு, மிகுதியும் பாலியல் உணர்வுடன் இடக்கரடக்கல் இல்லாமல், வெளிப்படையாகப் பேசிக் கூட்டத்தைக் கலகலப்பாகப் பண்ணுவதே சிறந்த இலக்கியப் பேச்சாகக் கருதிக் கொள்கிறார்கள். நல்ல இலக்கிய நூல்களைக் கற்றவர்கள் வெற்றுக் கதைகளையும் கொச்சை நடையையும் என்றுமே கையாளமாட்டார்கள். கழக இலக்கியங்களை ஆழமாகவும் அழுந்தியும் கற்காமல், மேலோட்டமாகக் கற்றவர்களே மிகுதியும் புலவர்களென உலா வருகிறார்கள். மிகப் பலர் கம்ப இராமாயணத்தை ஓரளவு கற்றுச் சொல்லாடலும், கதையளப்பும் செய்கிறவர்கள். அதில் பட்டிமன்றம், வழக்காடுமன்றம், முதலியவற்றுள் கலந்து கொண்டு இலக்கிய வணிகம் நடத்தி வருகிறார்கள். இவர்களுக்கு நிறையப் பார்வையாளர்கள் கூடுவதை முன்வைத்து அதிகப் பணம் தண்டுபவர்களாக இவர்கள் வளர்ந்து வருகிறார்கள். இவர்களுள் சமயச் சொற்பொழிவு செய்கிறவர்களும் ஒரு தனி வகையினராகச் சாய்கால் பெற்று வருகிறார்கள். இவர்களுக்கும் இக் காலத்தில் நிறைய தொகை கிடைக்கிறது.

அடுத்து, வணிக முறையிலேயே இலக்கியப் படைப்பாளர்-

Scanned with CamScanner

களும் கொழுத்த செல்வர்களாகப் பெருகி வருகிறார்கள். மொழி பற்றிக் கவலைப் படாமல் இவர்கள் ஆக்கிப் படைக்கும் பல்சுவைத் திரட்டுகள், சிறு கதைகள், புதினங்கள், திறனாய்வுக் கட்டுரைகள், இலக்கியக் கட்டுரைகள் ஆகியனவும் கொள்ளையடிப்புகளாகப் பெருகி வெளி வருகின்றன. இவர்கள், நூல்களை எவ்வாறேனும் எழுதுவது, அவற்றைப் பல வகையான முயற்சிகளின் அடிப்படையிலும், நூலகங்கள், விற்பனை நிலையங்கள் முதலியவற்றில் இடம் பெறச் செய்வது, அவற்றிற்குச் செய்தியிதழ்களிலும் பிற கிழமை, மாத வெளியீடுகளிலும் மதிப்புரை, திறனாய்வுரை வரும்படி செய்வது—ஆகியவற்றுள் ஈடுபட்டுச் செல்வம் திரட்டுவதே, தமிழ்த் தொண்டு என்பதன் பெயரில் இவர்கள் செய்து வருவன அனைத்து வகையிலும் தமிழின் உயர்தனித் தன்மையைக் கீழ்மையுறச் செய்வனவாகும். மொழி பற்றியோ, இனம் பற்றியோ, நாடு பற்றியோ இத்தகையோர்க்குத் துளியும் கவலையிருப்பதில்லை. இலக்கியங்களைப் படிப்பதும் படைப்பதும் மக்களின் வாழ்வு நலம் கருதி என்றிராமல் தங்களின் வாழ்க்கை கருதியே என்று இவர்கள் கருதிக் கொண்டிருக்கிறார்கள்.

எந்த வகையில் அல்லது கோணத்தில் எழுதினால், தங்கள் படைப்புகள் விலை போகுமோ, பெருத்த வருமானம் வருமோ, அந்த வகையில் எழுதிப் பொருளீட்டுவதே இவர்களின் வாடிக்கையாகப் போய்விட்டது. அதுவும் இவர்கள் எழுதுவது மலிவான இலக்கியம், தரக்குறைவான படைப்புகள் என்பன பற்றியெல்லாம் இவர்கள் வெட்கமோ, தயக்கமோ கொள்ளாமல், மக்களைக் கொள்ளையடிப்பதற்காகவே, அல்லது அவர்களை அடிமையோ, கீழ்மையோ படுத்துவதற்காகவே, எழுதிக்குவிக்கிறார்கள். பணம் குவிப்பதே இவர்களின் பெருநோக்கமாகிவிட்டது. மொழியோ, மக்கள் நலமோ இவர்களுக்குப் பொருட்டல்ல.

இன்னும் சிலர் திறமையுள்ள பிறரைப் பணம் கொடுத்து எழுதுவித்துத் தங்கள் பெயர்களுக்குப் பெருத்த விளம்பரம் தேடிக் கொள்கின்றனர். அவ்வாறு எழுதப் பெறும் நூல்களுக்குரிய பரிசுகளையும் பாராட்டுகளையும் இவர்களே அவர்களைப் பிடித்து, அவர்களுக்குக் கொடுக்கவேண்டியதைக் கொடுத்துத் தங்களுக்கே அவை கிடைக்குமாறு விளம்பரம் தேடிக் கொள்கின்றனர். பட்டங்களோ, பதவிகளோ அறிவுக்கோ, புலமைக்கோ, உழைப்பிற்கோ என்றில்லாமல் பணத்துக்கும், பரிந்துரைக்கும், பறிப்புக்கும் உரியனவாகிவிட்டன.

இவ்விடத்தில் இன்னொன்றையும் சொல்லியே தீர வேண்டியுள்ளது. எழுத்துகளிலும் பேச்சுகளிலும் இக்காலத்தில் மிக மலிந்த அறிவு வாணிகச் சரக்குகளாகத் திருக்குறளும் கம்ப இராமாயணமும் ஆகி உள்ளன என்பதைப் பெரிதும் வருத்தத்துடன் குறிப்பிட வேண்டியுள்ளது. அவ்விரு பெரும் பேரிலக்கியங்களால் பிழைக்கும் அறிஞர்கள் பலராகியுள்ளனர். திருக்குறளைப் பற்றிப் பேசாத எழுதாத தமிழறிஞர்களே இலர் என்பதனால், திருக்குறள் பெருமை பெருவது போய், இழிவு சிறப்புப் பொருளாக அம் மெய்ப்பொருள் நூல் ஆகி விட்டதே என்பது

நெஞ்சில் நெருப்பாகிக் கனல்கிறது. சபரி மலைக்குச் செல்லும் ஐயப்பப் பத்தர்கள் கருப்பு உடையுடன் தெரு உலா வருதல் போல், திருவள்ளுவப் பத்தர்கள் விலை மலிந்து காணப்பெறும் நிலையில், தமிழகத்தில் தலை இடை கடையெங்கணும் உலா வரத் தொடங்கி விட்டனர். இதுவன்றித் திருக்குறளுக்கு அனைவருமே உரையும், சிறப்புரையும், விளக்கவுரையும்வேறு செய்யத் தொடங்கி விட்டனர். இவ்வுரைகளையெல்லாம் தேடிப் பிடித்துக் கற்பதை விட, திருக்குறள் மூல நூலையே முரணின்றிக் கற்கும் பணியை இவர்களெல்லாரும் சேர்ந்து எளிதாக்கி விட்டனர். திருக்குறள் சந்தை வாணிகம் தெருத்தோறும் மலிந்து அதைத் தெருக்குறள் ஆக்கிவிட்டது; எவ்வகையானும் பெருமைக்கோ பெருமிதத்திற்கே இடமில்லாமல் செய்து விட்டது. பெரிதும் இழிவுக்கே இடனாக்கி நிற்கின்றது. (தொடரும்)

(அட்டை 4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்று இருபது அகவையைத் தொடும் தமிழ் இளைஞர்கள், விடுதலை உணர்வு கொண்ட கட்டுரைகளையோ, பாடல்களையோ, வெறும் திரைப்படப் பாடல்களையோகூட கேட்கின்ற வாய்ப்பே இல்லாமல் வளர்ந்தவர்களே. அத்தகு இளைஞர்கள் கைகளுக்குத் தென்மொழி போய்ச் சேரவேண்டிய தலையாய பணியினைச் செய்ய வேண்டியது தமிழ் மறவர்களின் கடமையாகின்றது.

"இந்து மதத்தினின்றும், மதப்பூசல்களினின்றும் ஆரியப் பார்ப்பனீயத்தினின்றும் விடுபடவேண்டுமானால், நாம் இந்திய அரசியல் பிடிப்பினின்றும் விடுபட்டேயாகல் வேண்டும், என்பதே நம் மூச்சு, நோக்கம், கொள்கை-முயற்சி!" என்னும் தென்மொழியின் கொள்கை விளக்கத்தில் தமிழர் 'இந்துமதத்தில்' இருந்து விடுபடுதல் எங்ஙனம்? தமிழர் சமயத்திற்கும், இந்து சமயத்திற்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகள் யாவை? என்பதை ஐயா அவர்கள் விளக்கவேண்டும்.

—எம். ஆர். பிரதாப் குமார், பெங்களூர்-16.

(இதழாசிரியரின் சிறு விளக்கம்: தமிழரின் தூய சைவ, மாலியப் பெருஞ் சமயக் கொள்கைகளையும், மற்ற சிறுதெய்வக் கொள்கைகளையும் தங்கள் வேத மதத்தொடு இணைத்துக் கொண்டு, இந்தும்மதம் என்னும் ஒரு ஆரியக் கலவை மதத்தை இந்தியா முழுவதும் ஆரியப் பார்ப்பனர் பரப்பினர்; தூய தமிழில் சமக்கிருதத்தைக் கலந்து பரப்பினது போல: எனவே தன்மானவுணர்வுடன், சமசுக்கிருதக் கலப்பு மொழியினை நீக்கித் தூய தமிழுணர்வை மேற்கொள்வதுபோல், ஆரியப் பார்ப்பனரின் வேத்மதக் கலவையாகிய இந்து மதத்தினின்றும் நீங்கித் தேவையானால், நம் பழந்தமிழ்த் தூய சமயங்களான சைவத்தையும் மாலியத்தையும் அவற்றின் கலப்புகளை நீக்கிக் கொண்டு பின் பற்றலாம். மேலும் விளக்கம் வேண்டின் பாவாணரின் 'தமிழர் மதம்' என்னும் நூலைப் படிக்கவும்.—ஆ-ர்).

தொல்காப்பியம்

உரைப் பெரும்புலவர். சந்திர பாலசுந்தரனார்

(இதழாசிரியர் முன்னுரை: உரைப் பெரும் புலவர், தமிழ்த் திரு. சந்திர பாலசுந்தரனார் நம் அருந்தமிழ் மொழிக்கெனவே பெருந்தவத்தால் தோன்றிய தமிழ்வயிரக்கட்டி; இலக்கண, இலக்கிய ஒளிக்கதிரவன்!

பொய்யும் புளுகும் கையுங் களவுமாய் மெய்யினும் வாயினும் மிடைந்து விளங்கிடும் இக்கால மாந்தரிடை, மெய்யும் ஒழுக்கமும் மீமிசைப் பண்பும் செய்யறக் கூறுகளும் சிறந்து தோன்றிய துய்யறிவாளர், அவர். அவரைப் பற்றி நினைக்கையிலேயே நம் உள்ளம் பெருமிதம் கொள்கிறது; அறிவு தலைச்செறி வெய்துகிறது; உயிர் பொங்குகளிப்பால் பொலமிகுந்து சுடர்கிறது; அவரின் செய்யொளி மெய்யுடலைக் காணும் பொழுதெல்லாம் நாம் கதிரவனைக் கண்ட தாமரை போல் மிகுகளி கூர்ந்திருக்கின்றோம்;

அறிவாற்றல் நிறைந்து அறவாற்றல் பொதிந்து, செறிதீந் தமிழ்க்குக் கிடைத்த அச்சிறந்த பேரறிஞரை, இன்னும் தமிழரும் தமிழறிஞரும் தமிழுலகமும் உரிய முறையில் கண்டு கொள்ளவும் உற்ற முறையில் பேணிக் கொள்ளவும் இல்லையே என்று நினைந்து கவல்கின்றது, நம் நெஞ்சம்.

'சோறுடைத்து சோழநாடு' எனும் பேறுடைய பெருந்தமிழ்த் தஞ்சையில் வாழ்ந்து வருகின்ற வீறுடைத் தமிழ் மகன், அவர். பலவாண்டுகள் தமிழ் பயின்றவர்; பலவாண்டுகள் தமிழ் பயிற்றுவித்தவர். சாவியும் பதருமாய்ப் புலவரென மேவித் தமிழ் மேய்ந்து திரியும் வலக்காரப் புன் புலவர்க்கிடையில், முத்தாய்ப் பவளமாய் முழுமையாய் விளைந்த மூதறிஞர் அவர்! செந்தமிழின்கண் சிறந்து விளங்கும் பைந்தமிழ் இலக்கியங்களைப் பழுதறக் கற்றும், இலக்கணங்களை எழுத்தறப் படித்தும், தமிழாய்ப் படிந்து வடிந்த தீஞ்சாறு அவருடைய அறிவு!

தஞ்சையில் பெருந்தமிழ்த் தொண்டாற்றி, அரிய செந்தமிழ் இலக்கியங்கள் சில செய்து, தம் ஆசிரியப் பணியினின்று ஓய்வு பெற்று, இக்கால், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கழக இலக்கிய அகராதித்திட்டத்தில் தம்மை முழுகடித்துக் கொண்டிருக்கிறார்.

நீண்ட நெடுங்காலமாய்த் தமிழ்க் களங்கண்ட அவர், அண்மையில், நம் ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியத்திற்கு எழுத்தும், சொல்லும், பொருளுமாய்க் காண்டிகை உரை செய்து, அதனை மூன்று பகுதிகளாகத் தம் அரும்பெரும் முயற்சியால் அச்சிட்டும் வழங்கியிருக்கிறார்; அவற்றைத் தென்மொழியின் மதிப்புரைக்கும் அனுப்பியிருக்கிறார்.

காலமும் நேரமும், ஒருசிறு கடுகளவு ஓய்வும் இன்றி இயங்கும் நமக்கு, அக் காண்டிகையுரைக் கடலுள் நீந்தவும் மூழ்கவும்

Scanned with CamScanner

நேர்தல் அமையாமல், அக் கடமையில் காலங்கடத்தி வருகின்-றோம். திருவருளும் தேர்ந்த வேளையும் வாய்ப்பாக அமைகை-யில், அம் முந்நூல்களுக்கும் முன்னுரை போல ஒரு திறனாய்வு நல்லுரை வழங்க விருக்கின்றோம்.

இவ்விடைப் பொழுதில், அவரின் எழுத்ததிகாரப் பொரு-ளதிகார முன்னுரை, முகவுரைகளினின்று. தொல்காப்பியச் சிறப்புரைகளை, இக்கட்டுரைத் தொடரைப் பிறரும் பயன் நுகரும் வண்ணம், முன்னும் பின்னுமாய் இயைபு பெறத் தொகுத்துத் தருகிறோம்.

நம் அருந்தமிழ்த் தென்மொழி அன்பர்கள், இவ்விருந்-தமிழ்தை விருப்புடன் உயிருணப் போல் உண்டு மகிழ்ந்து உரம் பெறுவார்களாக! (ஆசிரியர்.)

''வையம் ஈன்றதொன் மக்கள் உளத்தினைக்
கையினால்உரை காலம் இரிந்திடப்
பைய நாவை அசைத்த பழந்தமிழ்
ஐயை'' —முதற்கண் பேச்சு

வழக்காக எழுந்தகாலை, எவ்வெவ்வாறெல்லாம் உருப்பெற்றுக் கிளைத்து வளர்ந்து மக்கள் உளக்கருத்தினைப் புலப்படுத்தினாள் என்பது கடை போகாத ஆய்வெனினும், அவ் வாய்வு சுவை யுடையதொரு முயற்சியேயாம்.

தமிழ்க்கன்னி, பேச்சு வழக்காகிய நடைபயின்று, எழுத்து வடிவாகிய கலை பூண்டு, புலவோர் நெஞ்சங்களில் அரங்கேறிய காலத்துச், சொற்களின் வரிவடிவம் பொருட்குறியீடாக அமைந்ததா, ஒலிக்குறியீடாக நிறைந்ததா, என்னும் ஆய்வும் அத்தகையதே எனினும், எழுத்து வடிவம் பெற்ற ஏனைய உலக மொழிகளோடு அவற்றை ஒப்பிட்டு ஆராய்வதற்குப் பெரிதும் வாய்ப்பு உள்ளமையான், அவ்வாய்வு சில பல உண்மைகளைத் தெரிந்து கொள்வதற்குத் துணை புரியும்.

மேலும், பொருளையும் பொருளின் பண்பு, செயல் முதலிய-வற்றையும் குறிப்பதற்குத் திறன்பெற்று வளர்ந்து வரிவடி-வுற்றுத் தொடர் (வாக்கியம்) ஆக்கம் பெற்ற நிலைகளை ஆராய்-வதும் அவ்வாறேயாம். அங்ஙனம் எழுதப்பெற்ற சொல், சொல்-தொடர்களை எழுதிய, எழுதப்பெற்ற, கருவிகளோடு பேணிக் காத்து, எதிர்கால மக்களுக்குப் பயன்படச் செய்த சான்றோர்கள் வணக்கத்திற்குரியவர்கள் என்பதில் ஐயமில்லை.

அங்ஙனம் ஒருமொழி, பேச்சு வழக்காக உருப்பெற்று, எழுத்து வடிவமுற்றுத் தொடர்நிலையெய்தி, நூல்வடிவாக எழுதிப் பாதுகாக்கும் நிலையினை எய்தப் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகும் என்பதில் கருத்துமாறுபாடு பெரிதும் உண்டாதற்கில்லை. வளர்ந்து முற்றிய ஒரு மொழியினின்று. பிறிதொரு மொழி கிளைக்குமாயின், அது சில நூற்றாண்டுகளில் உருப்பெற்றுச் செம்மையுற இயலும் என்பது அறிவியலுக்கு ஒத்ததேயாம்.

Scanned with CamScanner

ஒரு மொழி, தொடர் ஆக்கம் பெற்று வளர்ந்து, எதிர்காலத்தார் நினைதற்கும் நினைவுறுத்தற்கும் ஏற்பத், தொடர்களையும் சொற்களையும் செம்மை செய்து, அழகும் சுவையும் பெற அமைத்துக் கொள்ளும் பாட்டு அல்லது செய்யுள் வடிவம் எய்த, மேலும் பல நூற்றாண்டுகள் ஆகும். அங்ஙனம் வளர்ந்து, இலக்கியச் செம்மையுற்ற நிலையில்தான், இலக்கணம் பற்றிய சிந்தனை தோன்றும்; மொழி பற்றிய அமைப்பாய்வும் ஒழுங்குபடுத்தும் உணர்வும் தோன்றும். எனவே, இலக்கணத் தோற்றம் மிகப் பிற்பட்ட நிலையில்தான் நிகழும் என்பதில் ஐயமில்லை.

இலக்கண நோக்கில் மொழியை ஆராயுங்கால், முதற்கண் சொற்றொடர் அமைப்பையும், பின்னர்ச் சொற்களின் அமைப்பையும், நிலைகளையும், அதன் பின்னர்ச் சொல்லுறுப்பாகிய எழுத்துகளையும் ஆராய நேரும். அவ் வாராய்ச்சியில் ஓரளவு தெளிவும் செம்மையும் உற்ற பின்னர்தான், எழுத்துகளின் ஒலி நிலைகள் ஆராய்ந்து காணப் பெறும்.

மேற்கூறிய ஆய்வுகள் ஓரிருவராலோ, ஒரு கால எல்லைக்குள்ளோ நடைபெறுதல் இயலாது. இலக்கணம் பல்லாண்டுக்காலம் பலரால் ஆராயப் பெற்று, அம்மொழி வழங்குவோர் ஏற்றுப் பயிலும் நிலையில்தான், வரையறை பெறும். அவ்வரையறைகள் செம்மையுற்ற பின்னரே நூற்பா (சூத்திர) யாப்பு முறையில் இலக்கண நூல்கள் உருப்பெற இயலுமென்பதில் கருத்து வேறுபாட்டிற்கு இடமில்லை.

இலக்கண நூல்கள் உருப்பெற்று, அவற்றை அம் மொழியை வழங்கும் சான்றோர்கள் ஏற்று, அவற்றின் வழியே இலக்கியங்களை ஆக்க, அவற்றை மக்கள் பயிலத் தொடங்கிய பின்னர்தான், அம் மொழி பெரிதும் சிதைவுறாமல் வளரும்; செழிப்புறும்.

இலக்கண நூல்களை உருவாக்கும் அறிவும் ஆற்றலும் வாய்க்கப் பெற்ற மெய்யறிவாளர்கள், எழுத்தொலி முதலாகச் செய்யுள் தொடர்நிலை ஈறாக நோக்கி, இலக்கண மரபுகளையும், கோட்பாடுகளையும் வரைந்து கூறுங்கால், சிலவற்றால் பலவற்றை உணரும் வண்ணம் அமைத்துக் கூறுவர். அங்ஙனம் நூல் செய்யுங்கால், சிலவற்றை நீக்கியும், இன்றியமையாச் சிலவற்றை ஆக்கியும், பேச்சு வழக்கினால் மொழி சிதைவுறாத வண்ணம் மிக நுட்பமாகச் செய்வர்.

உலகிடை வழங்கும் தொன்மையும் செம்மையும் சான்ற மொழிகளுள் தமிழ்மொழியும் ஒன்று. எனினும் பிறமொழிகளுக்கில்லாத ஒரு சிறப்பு இதன்கண் காணப் பெறுகின்றது; அஃதாவது, பிறமொழிகளுக்கு அதன் தன்மைகளை விளக்கும் அடைமொழிகள் பெரும்பாலும் இல்லை. தமிழ்மொழிக்குச் 'செம்மை' முதலாய பல அடைகள் காணப் பெறுகின்றன. "செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்துநூல் கண்டு" என்பது பாயிரம். அடையாவது (விசேடனம்) பொருளின் பண்பு முதலாயவற்றை விளக்குதலாம்; செந்தமிழ் என்பது

இலக்கண ஆசிரியர் தம் வழக்கு. தண்டமிழ், பைந்தமிழ், நறுந்தமிழ், முத்தமிழ், கன்னித்தமிழ் முதலாயவை இலக்கிய ஆசிரியர் தம் வழக்கு.

இவ் வடைமொழிகளை ஊன்றி நோக்கின், அவை, மொழியின் பண்புகளை மட்டுமன்றித், தோன்றி வளர்ந்து வந்த வரலாற்று நிலைகளையும் சுட்டி நிற்றலைக் காணலாம்.

பேச்சு வழக்கினின்று தமிழ் எழுத்து வடிவம் பெற்று, இலக்கிய நிலை எய்தியகாலை, இலக்கணம் வகுத்த பேரறிஞர்கள் சொற்களையும் சொற்றொடர்களையும் செப்பஞ் செய்து அமைத்திருத்தல் வேண்டும் என்பது 'செந்'தமிழ் என்னும் அடையினால் புலனாகும். அங்ஙனம் செயற்கையாகச் செம்மையுறாமல் இயற்கையாகவே வழங்கிய நிலையை நறுந்தமிழ் என்னும் அடை சுட்டுகின்றது. அவ்வகையிற் கிளைத்துப் பெருகிய நிலையை வண்டமிழ் என்னும் அடை காட்டுகின்றது. அங்ஙனம் நெறிப்படுத்திய வழக்கினையே மரபு என்னும் குறியீடு புலப்படுத்துகின்றது.

மரபு என்பதற்குப் பொருள், வரலாற்று முறைமையான் வரும் வழக்கு என்பதாகும். 'மரபுநிலை திரியின் பிறிது பிறிதாகும்' ஆதலின், மரபு பிறழக் கூடாதென்பதனைக் 'தம் மரபினவே' (கிளவி-11) என்பதனால் அறியலாம். சிறுபான்மை பிறழும் மரபுகளைப் புறனடையான் அடக்கிக் கொள்வதும் மரபே யாகும்.

தமிழ்மொழிக்குரிய அடிப்படை மரபுகளை மொழியியல் நோக்கில் சிறிது காண்போம். தமிழ்மொழிச் சொற்களைத் தனியாகவும் தொடராகவும் பேசுங்கால், எழும் ஒலிக்கூறுகள் தொல்காப்பியத்தின் அடிப்படையில் நோக்கின் தொள்ளாயிரத்து ஐம்பத்தேழாக அமைவதைக் காணலாம். அவை வருமாறு:

உயிர் எழுத்து ஒலிகள்	...	12
அளபெடை-3, 4 மாத்திரை-7, 7	...	14
ஐகாரப்போலி (அஇ-அய்)	...	2
ஔகாரப்போலி (அஉ)	...	1
புள்ளி மெய்களுள் வல்லெழுத்து	...	6
,, மெல்லெழுத்து	...	6
,, இடையெழுத்து	...	6
உடனிலைமெய்களால் மயங்கும் ஒலிகள்	...	88
மகரக் குறுக்கம் (ன ண ழ வ-சார்பாக)	...	4
ஒற்றளபெடை	...	10
ஆய்தத்தைச் சார்ந்த வல்லெழுத்தொலி	...	6
குற்றியலிகரம் அமைந்து வருமிடங்கள்	...	36
குற்றியலுகரக் குறுக்கம்	...	6
ஆய்தம் முன்பின் சார்பு காரணமாக வருவன (5 குறிலின்முன், 6 வல்லெழுத்தின் பின்)	...	30
ஆய்தம் குறிப்பிசைக்கண் மிகுதல்	...	2

ஆய்த அளபெடை	1
மெய்யினை ஊர்ந்தமையான் உயிர்த்திரிபு ...	216
உயிர் ஊர்ந்தமையான் மெய்யின் திரிபு ...	216
உயிரளபெடையான் வரும் மெய்யின் திரிபு ...	252
ஆக	957

உடனிலை மெய்ம்மயக்க விளக்கம்:

க	— ட ற ல ள ண ன ய ர ழ ங இவற்றின் பின் வருவதால் எய்தும் மயக்கம்...	10
ங	— ய ர ழ ,, ...	3
ச	— ட ற ல ள ண ன ய ர ழ ஞ கு ,, ...	10
ஞ	— ண ன ய ர ழ ,, ...	5
த	— ய ர ழ ந ,, ...	4
ந	— ய ர ழ ஞ ,, ...	4
ப	— ட ற ல ள ண ன ய ர ழ ம ,, ...	10
ம	— ண ன ய ர ழ ஞ ,, ...	6
ய	— ல ள ண ன ஞ ந ம வ ர ழ ,, ...	10
வ	— ல ள ண ன ஞ ந ம வ ர ழ ,, ...	10
ரழ	ஒழிந்த பதினாறு மெய்களின் இரட்டிக்குமொலி ...	16
	ஆக	88

எனினும், தமிழ்நூலார் பன்னிரண்டு உயிர்ப்பிசை ஒலிகளையும், பதினெட்டு ஒற்றொலிகளையும், மூன்று சார்பொலிகளையுமே எழுத்தொலிகளாக (ஒலியன்களாக) வகுத்து, மேற்கூறிய 957 ஒலிகளையும் அடக்கியுள்ளனர்.

மற்றும், உயிரிசையைக் குறுமை (குறில்), நெடுமை (நெடில்) எனவும், ஒற்றொலிகளை வன்மை (வல்லெழுத்து), மென்மை (மெல்லெழுத்து), இடைமை (இடையெழுத்து) எனவும் வகுத்துள்ளனர்.

மேலும், வடிவு கொள்ளும் மெய்கள் ஒலியாமையான், அவை புள்ளியுற்றும், உயிர்ப்புற்றும் ஒலிக்கும் என்பதை ஓர்ந்து, மெய் எழுத்து மொழிமுதற்கண் வாரா என வகுத்தனர்.

தொடரொலிகளைத் துணித்து, ஓரெழுத் தொருமொழி ஈரெழுத்தொருமொழி, தொடர்மொழி எனப்பாகுபாடு செய்து கொண்டனர்.

இவ்வாறே சொல்லிலக்கணங்களும் பொருளிலக்கணங்களும் அமைத்துக் கொண்ட மரபுகள் பல, அதனான் எழுத்தொலி இலக்கணங்களைக் கூறும் முதலியலுக்குத் தொல்காப்பியர், நூல்மரபு எனப் பெயரிட்டு, முதல் நூற்பாவிலேயே 'என்ப' என, மரபினைச் சுட்டி உணர்த்தினர்; தொல்காப்பியத்துள்

கூறப்பெறும் இலக்கணம் யாவும் தமிழ்மரபிற்குரியனவை என்பது தோன்ற, நூன்மரபு எனத் தொடங்கி, மரபியல் என முடித்துக் காட்டினார்.

தமிழ்மரபினையும் தொல்காப்பிய நெறியையும் ஓர்ந்து உணராது—எழுந்த உரைகளும், அவ்வுரைகளை ஒட்டியும், வடநூல் முறையினைத் தழுவியும் எழுந்த பின் நூல்களும், தமிழ் இலக்கணம் என்னும் பெயரால் நிலவுவதும், அவற்றைத் தமிழ் மக்கள் பயிற்றுவதும், பயில்வதும், தமிழர்தம் அல்லூழ் என்பது தவிரப் பிறிதொன்றும் ஈண்டு விரிப்பதற்கில்லை.

ஒரு மொழியை இலக்கண முறைமையால் செம்மை செய்வ- தன் நோக்கம், அம்மொழியை வழங்கும் மக்களின் சோர்வாலும், வட்டார வழக்குகளாலும், பிறமொழித் தாக்கத்தாலும், அது சிதைந்துவிடாமல், நிகழ்காலச் சான்றோர் தம் கருத்துகளை எதிர்-கால மக்கள் திரிபின்றி உணர்ந்து கொள்ளச் செய்தல் வேண்டு-மென்பதேயாம்.

அதனால், இலக்கண நூல் யாத்த தொல்லாணை நல்லா-சிரியன்மார் வழங்கிவரும் இருவகை வழக்கினை நோக்கி மட்டும் வரையறை செய்யாமல் நிலைபேறுடைய இலக்கியங்கள் தோன்று-தற்குரிய நெறிகளையும் எண்ணி அமைத்து முறை(விதி) செய்து போந்தனர். இதனை, ''நாடக வழக்கினும் உலகியல் வழக்-கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம்'' என்பதனால் உணர-லாகும். செய்யுள் செய்தற்கு முப்பத்துநான்கு வகை உறுப்புகள் கூறியதற்குக் காரணமும் அதுவேயாம்.

தமிழுக்குரிய அடைமொழிகளுள் முத்தமிழ் என்பதும் ஒன்று. அஃதாவது உயர்ந்தோர் வழக்காய்த் தமிழ் உரியடியாகத் தோன்றிய சொற்கள் யாவும் இயல், இசை, மெய்ப்பாடு என்னும் முக்கூறுகளும் உடையவாய்ப் பலுக்குதற்கு எளிமையும், கேட்ப-தற்கு இனிமையும், பன்னுதற்கு நறுமையுமாக, வகுத்துக் கொண்ட ஓசை ஒலிகளையே எழுத்தாகக் கொண்டு உருவாகிச் செவிப்புலனுக வந்து இசை நிரப்பிச் சிந்தைக்குப் பொருளை அறி-விப்பதுடன், உள்ளத்தைத் தொட்டு மெய்ப்பாட்டுணர்வையும் எழுப்பும் பெற்றிமையும் உடையவை. ஆதலின் ஒவ்வொரு சொல்லும் இயல், இசை, மெய்ப்பாடு என்னும் முக்கூறுகளை உடையது என்பதே அவ்வடைமொழியின் கருத்தாகும்.

(மற்று) இயல், இசை, நாடகம் என்னும் கலைப்பிரிவு எல்லா மொழிகட்கும் உரியவையாகலின், அதனைப் பொருளாகக் கோடல் தமிழின் இத்தன்மையைப் புலப்படுத்தா தென்க.

இவ்வியல்புகளையெல்லாம் ஓர்ந்துணர்ந்த ஒல்காப் பெரும் புகழ்த் தொல்காப்பியனார், முந்து நூல்களை மட்டும் நாடிக் கைவந்தவரை கற்றுத் தாமே ஓர் இலக்கண நூலைச் செய்ய முற்படாமல், வடவேங்கடம் தென்குமரி ஆயிடை வாழும் மக்களின் இருவகை வழக்குகளையும் உடனுறைந்தும் ஊடுருவியும் ஆராய்ந்து தேர்ந்து, அவற்றை முறைப்பட எண்ணி, மயங்கா

மரபின் எழுத்துமுறை காட்டிப் போக்கறு பனுவலாகத் தம் நூலைத் தொகுத்தளித்துள்ளார்.

எனவே, தமிழ்மொழியின் மரபையும் இயல்பையும் போக்கின்றிப் புலங்கொள்ள விழையும் மாணுக்கர், தொல்காப்பிய நூற்பாக்களையே பல்காலும் நோக்கிச் சிந்தித்து உணர்தல் கடப்பாடாகும்.

இடைக்காலத்தெழுந்த உரைகளும் வழி நூல்களும், தொல்காப்பியத்தை அறியத் துணைபுரிவனவேயன்றி, அதனை அறிவிப்பன அல்ல. இக்கால இடைக்கால ஆய்வுரைகட்கும் இக் காண்டிகை யுரைக்கும் மேற்கூறிய கருத்து ஒக்கும்.

பழைய உரைகள் இருக்க, இப் புத்துரையை யான் வரைந்ததற்குக் காரணம், பழைய உரைகள் பெரும்பாலும் இப் பாரத நாட்டில் வழங்கும் மொழிகள் யாவும் பிராகிருதங்களே அவற்றிற்குத் தாயும் வழிகாட்டியும் சமற்கிருத(வட) மொழியே என்னும் அடிப்படையில் வரையப்பட்டனவாக உள-எனவும், இளம்பூரணர் தவிர்த்த ஏனைய உரையாசிரியர், வடமொழி இலக்கணக் கோட்பாடுகள் மட்டுமன்றி வேத வேதாங்கங்களுக்கு ஒப்பவே உரைகாணும் நோக்குடையராயினர் எனவும் கண்டமையேயாம். வீரசோழியம் முதலாய இடைக்கால இலக்கண நூல்களும் அக்கோட்பாட்டினவேயாகும்.

தமிழ்மொழி ஆரியக் குடும்ப மொழியினின்று வேறுபட்டது, தனித்தன்மையுடையது, தென்னக மொழிகட்கெல்லாம் அடிப்படையானது என்பது உரையாசிரியன்மார் காலத்து விளக்கமாகவில்லை. இக்கால ஆய்வாளர்கட்குத் தமிழ்மொழி ஆரிய (வட) மொழியினின்று வேறுபட்டது என்பது தெரியுமேனும், அவர்களும் மேலையாரிய மொழிகளின் கோட்பாடுகளின் அடிப்படையிலேயே ஆராய்ந்து முடிவுகாணும் நிலையில் உள்ளனர்...

உரையாசிரியன்மார் பெரும்பான்மையும், நூலாசிரியரின் நோக்கினையும் கருத்தினையும் புலப்படுத்தும் எண்ணமின்றி வழங்கிவரும் இலக்கியங்களுக்கு ஏற்பக் கூறுவதிலும் வடநூற் கருத்துகளொடு மாறுபடக் கூறுவதிலும், தாம்தாம் மதிக்கும் சமயக் கோட்பாடுகளை இதன் வாயிலாகப் புலப்படுத்துவதிலும், தமது ஆழ்ந்தகன்ற நுண்மாண் நுழைபுலத்தைக் காட்டுவதிலும், வேட்கையுடையாராய்த் தமிழ்மொழியின் தன்மையினையும் அறிவியலையும் புறக்கணித்து உரை கூறியுள்ளார் என்பது என் கருத்தாகும்.

மேலும், பயின்றறிதற்கு அருமைப்பாடுடையதாகத் தத்தமக்குள் முரணியும் திரிந்தும் அமைந்துள்ள அவ்வுரைகளான், தமிழ் இலக்கணம் என்றாலே மாணுக்கர் உள்ளத்தில் ஒருவகை அச்சமும் வெறுப்பும் வளர்ந்து, இலக்கணத்தையே புறக்கணிக்கும் நிலை வளர்ந்து வருகின்றது. பயிற்றுவிக்கும் ஆசிரியர்களின் நிலையும் ஏறத்தாழ அவ்வாறே உளது.

Scanned with CamScanner

முனைவர் ஆறு அழகப்பனார் மடலை இருவர் வழிமொழிகின்றனர்!

அன்புள்ள பாவலரேறு ஐயா அவர்களுக்கு, வணக்கம்.

சென்ற முன் திங்கள் (சு 25; ஓ : 3) தென்மொழி இதழில் முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் எழுதிய திறந்த மடல் கண்ட பிறகே திரு. சதாசிவம் தஞ்சையில் பணிபுரிகிறார் என்று அறிந்து பேரதிர்ச்சி அடைந்தோம். முனைவர் அழகப்பன் அவர்கள் மடலால் திரு. மு. சதாசிவத்தின் அம்மண(நிருவாண)த் தோற்றம் அறிந்தோம். அது தமிழ் உலகம் அறியாததும் அன்று. அவர் தமிழறிஞர்களைக் குறிப்பாக திரு. க.ப. அறவாணன், திரு. வ. சுப., திரு. பாவலர் போன்றோர்களைப் பொச்சாப்பால்* எழுதிக் கொண்டிருந்தார். அதற்கு அரசு கொடுத்த பரிசு போல இது (இப்பதவி) உள்ளது. தமிழர் மாநாடு, கருத்தரங்குகளில் இவரை வாசலில், தாம் எழுதிய இரவல் சரக்குகளைப் புத்தக வடிவில் கொண்டு வந்து கடை வைத்து விற்கும் வணிகராகவே கண்டிருக்கிறோம். கருத்தரங்கில் ஆய்வாளராக உள்ளே இருந்ததில்லை. மேலும், ஏதாவது ஒன்றிரண்டு கட்டுரை படித்தால், அதுவும் பாவலரைச் சாடியே படிப்பார். முனைவர் வ. சுப. இவரது தீயபோக்கை உணர்ந்து, மாநாடுகளில் கட்டுரை படிக்கும் முன், வடிகட்டும் போக்கைக் கொண்டு வந்தார். செந்தமிழ், தென்மொழி, தமிழ்ப்பொழில்

*பொச்சாப்பு—என்பது மறதியைக் குறிக்கும்.
பொச்சரிப்பு—என்பது இடக்கர் சொல். ஆனால்
பொறாமையைக் குறிக்கும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

இச் சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு ஒருசாரார் தமிழின் தனித்தன்மையைக் காட்டும் தொல்காப்பிய மரபினை அழித்துவிட மறைமுகமாகச் சூழ்ந்து, வளரும் மொழிக்கு இலக்கணம் ஒரு சிறையாக அமையக்கூடாது என்று நல்ல போலவும் நயவ போலவும் பேசியும் எழுதி வருதலான், நிகழ்கால—எதிர்கால—மாணாக்கர் சிந்தித்து ஆவனபுரியத் தூண்டுவதும் இவ்வுரையின் நோக்கமாகும்.

ஒரு மொழி செம்மையான இலக்கண மரபுகளைப் பெற்றிருக்குமாயின், அம் மொழி பேசுவோர் அழிந்தாலும் அம் மொழி அழியாது. ஒரு மொழியின் இலக்கணம் சிதையுமானால், அம் மொழி சிதைதலோடு அதற்குரிய மக்களும் சிதைந்து திரிபுறுவர். தமிழ்மொழி இலக்கணம் அறிவியலொடு பட்ட செம்மையுடையதாகும். அதனைத் திரிபின்றி விளக்குவது தொல்காப்பியம் மட்டுமேயாம். தொல்காப்பியம் என்னும் கண்ணாடி, ஒவ்வாவுரைகள் ஆகிய புகை சூழ்ந்து, மொழியின் உண்மையான பாங்கினை அறிய வொட்டாமல் கிடக்கின்றது. அம்மாசுகளைத் துடைத்துக் காண வேண்டியது தமிழ்மக்கள் கடனாகும்.

(தொடரும்)

Scanned with CamScanner

போல ஆய்வேடுகளை நடத்தத் தெரியாதவர்; இவர் தன் வயிற்று எரிச்சலைக் கொட்டி 'அழ' ஒரு தாளிகையை (பத்திரிக்கையை)த் தொடங்கினர், இவ்வகையில் தொடங்கிய காலத்தில் தமிழகத்தில் உள்ள அறிஞர்கள் எல்லாரையும் இவ்விதழில் இதழுக்குரிய கருத்தாளர் (ஆலோசனைக்)குழு என்று பட்டியலில் போட்டதில், நாங்கள் மயக்கம் (மையல்) கொண்டதுண்டு. இப்பட்டியலில் பல இதழ்களில் முனைவர் ஆறு. அழகப்பன் அவர்கள் பெயரினையும் போட்டு விளம்பரம் தேடிக் கொண்டார். இப்புனைவை(வேடத்தை)க் கண்டு ஒவ்வொருவரும் இவரிடம் இருந்து விடுவித்துக் கொண்டனர்.

பொதுவாக, இவர் இருக்கும் பதவிக்கு, அடிநிலைப் பதவியான விரிவுரையாளரில் இருந்து இணைப்பேராசிரியர், பேராசிரியர், முதல்வர் என்ற பல பதவிகளைப் பெற்று, ஆளுமை (நிர்வாக)த் திறமை மிக்க ஒருவரைத்தான் அமர்த்துவது (நியமிப்பது) வழக்கம்- இத்தகைய படிநிலையற்ற பிறரைப் பழிதூற்றும் ஒருவரை, விரிவுரையாளரில் இருந்து நேராக இயக்குநராக அமர்த்தித் (நியமித்து) தமிழறிஞர்கள் கூட்டத்தைத் திடுக்கிட வைத்துள்ளது, அரசு! தமிழறிஞர்களுக்குத் துன்பம் தருவதனையே தொழிலாகக் கொண்ட இவரை அரசு தேர்ந்தெடுத்தது மிகவும் வருந்தத்தக்கது—என்று எதனையும் சீர்தூக்கிச் செயல்படும் நம் மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுக்கு (தலைமைச் செயலகம், சென்னை-9) தென்மொழி வாசகர்கள், தமிழன்பர்கள், தமிழ்வாணர்கள் தெரிவிப்பது கடமையாகும்,

இப்படிக்கு,

(1) மு. இராதாகிருட்டினன், துணைச் செயலர், தமிழகத் தமிழாசிரியர் கழகம், தமிழாசிரியர், காமராசர் நகர்மன்ற மேனிலைப்பள்ளி, விழுப்புரம்.

(2) வி. கிருட்டிணன், துணைத் தலைவர், தெ. ஆ. மாவட்டத் தமிழாசிரியர் கழகம், 5/332. அ. சுந்தரம் இல்லம், கெடார், 605402, விழுப்புரம் வட்டம்.

பெறுதல்

பாவலரேறு பெருஞ்சித்திரனர் அவர்கள், ஆசிரியர்-தென்மொழி திருவல்லிக்கேணி-சென்னை-5

குறிப்பு:

ஐயா அவர்களுக்கு, அன்புடன் இதனைத் தென்மொழியில் வெளியிடுங்கள்.

அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

Scanned with CamScanner

தென்மொழி
30-ஆம் ஆண்டு நினைவுகள்!

தென்மொழி தொடங்கிக் கடந்த ஆகத்து (1-8-1989) மாதத்-துடன் 30 ஆண்டுகள் நிறைவுற்றன. முப்பது ஆண்டுகளாக, நம் நாட்டுச் சூழ்நிலையில் தூயதமிழ் இதழ் ஒன்றினை நடத்துவ தென்பது கடலைக் கடையும் செய்தி என்பது நடுநிலையாக நின்று சிந்திப்பவர்கள், இதழ் வெளியீட்டில் ஈடுபட்டவர்கள் அனைவர்க்-கும் தெரியும். உண்மையை மறைப்பவர்களும், பொறாமை கொண்டவர்களும், எதிரிகளுமே இதை மறுப்பார்கள் அல்லது ஒப்பமாட்டார்கள்.

தென்மொழிக்கென்றே ஒரு வரலாறு உண்டு, இன்று தமிழ் ஒருவாறு தூய்மையாக வழங்கப் பெறுகிறது, சிலரேனும் தூய-தமிழ் முயற்சி செய்கிறார்கள் என்றால், அவை தென்மொழியால் விளைந்த விளைவு என்பதைத் தென்மொழியை அறிந்தவர்கள் அனைவருமே ஒப்புவர். மறைமலையடிகள் உள்ளத்தே கருத்-தளவில் தோன்றி, பாவாணர் இடத்தே ஏட்டளவில் வளர்ந்து, தென்மொழியின் முயற்சியால் இன்று தூயதமிழ் நாட்டளவில் பரவியுள்ளதை வரலாறு சொல்லும்.

தென்மொழியின் தோற்றமும் வளர்ச்சியும் பரவலும் நிலைப்-பும் பெரும்பெரும் நிகழ்ச்சிகளைக் கொண்டன. பலரின் வாழ்க்-கைத் தொடர்புகளைக் கொண்டன. அதன் வளர்ச்சிக்கும் மலர்ச்-சிக்கும் ஆக்கமாகவும் ஊக்கமாகவும் இருந்தவர்கள் இருப்பவர் கள் உள்நாட்டிலும் அயல் நாடுகளிலும் மிகமிகப் பலராவர். அவர்கள் அத்தனைப் பேர்களையும் நாம் என்றும் நன்றியுடன் நினைவு கூர்கிறோம். அவர்கள் அனைவரைப் பற்றியும் தென்-மொழி வரலாற்றில் குறிக்கப் பெறும்.

தென்மொழி முதல் இதழ் 1-8-1959-இல் வெளிவந்தது. அன்றைய அதன் விலை 25 காசுகள். அவ்விதழிலும், அடுத்து வந்த இதழ்களிலும் வெளிவந்த சில முத்தான உரைகள், இம்-முப்பதாம் ஆண்டை நினைவு கூரும் வகையில் இப் பகுதியில் இவ்வாண்டு முழுவதும் தொடர்ந்து வெளியிடப் பெறும். அன்பர்கள் அவற்றைப் படித்துணர்ந்து மகிழ்வார்க்ளாக.

பாவாணர் எழுதிய முதல் இதழ்
ஆசிரியர் உரை

(இயல்: 1 இசை: 1; 1—8—59)

தென்மொழி

சென்ற நூற்றாண்டில் வாழ்ந்திருந்த மனோன்மணீயம் ஆசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள்:

"கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயன்மறந்து வாழ்த்துதுமே"

—என்று தமிழின் திராவிடத் தாய்மையையும்,

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திலங்கிய சிவஞான முனிவர்,

''இருமொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர் இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்தர் இசைபரப்பும்
இருமொழியும் ஆன்றவமே தழீஇயனார் என்றாலிவ்
விருமொழியும் நிகரென்னும் இதற்கையம் உளதேயோ?''

—என்று தமிழின் சமற்கிருதத்திற் கொத்த தன்மையையும்,

பதினேழாம் நூற்றாண்டில் வதிந்திருந்த கருணைப்பிரகாசர்,

''மறைமுதற் கிளர்ந்த வாயான் மதிமுகிழ் முடித்தவேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப்பெற்றே
அறைகடல் வரைப்பிற்பாடை அனைத்தும்வென் றாரியத்தோ
டுறழ்தரு தமிழ்த்தெய்வத்தை உண்ணினைந் தேத்தல்
செய்வாம்''

—என்று தமிழ் ஆரியத்திற் கொப்பாயிருப்பதோடு, அதனொடு மாறுபட்டு உயர்விற்குப் போராடு நிலையையும்,

பதினாறும் நூற்றாண்டில் திகழ்ந்திருந்த திருவிளையாடற் புராண ஆசிரியர் பரஞ்சோதி முனிவர்,

''கண்ணுதற் பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில இலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணிடைப்பட கிடந்ததா எண்ணவும் படுமோ?''

—என்று தமிழுக்கு வடமொழிக் கில்லாத இலக்கண வரம்புண்மையையும், ஒரு பழந்தமிழ்ப் புலவர்,

''ஓங்க லிடைவந்(து) உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்''

—என்று தமிழின் உலக முதன்மையையும், இலக்கிய முன்மையையும் பலபடப் பாராட்டிச் சென்றனர்.

இங்கிலாந்தினின்று தென்னாடு வந்து, வாழ்நாள் முழுதும் தமிழையும் திராவிட மொழிகளையும் கற்றாய்ந்த கால்டுவெல் கண்காணியாரும், தமிழ் வடமொழித் துணையின்றித் தனித்து வழங்கவும், தழைத்தோங்கவும் வல்லதென்றும், திராவிட மொழிக்குடும்பம் உலக முதன்மொழிக்கு மிக நெருங்கிய தென்றும், மக்களின் முதல் பெற்றோர் மொழியினின்று வழிவழி வந்து வழங்கும் ஒரு சொற்றொகுதியைத் தன்னகத்துக் கொண்டுள்ள தென்றும், தெளிவாகக் கூறியுள்ளார்.

இங்ஙனமிருந்தும், சென்ற நூற்றாண்டில் தோன்றிய ஒரு புன்சிறு புதுக்கலவை மொழியினும் தாழ்வாகக் கருதப்பட்டு வருகின்றது; இலக்கண விலக்கியச் செம்மை நிரம்பி எண்டிசையும் பரவி என்றுமுள தென்றமிழ்க் கிவ்விழிதகவைப் போக்கி,

அதனை மீண்டும் அரியணையில் அமர்த்துதற்கே எழுந்தது இவ்விதழ்.

குல, மத, கட்சி, நிலச் சார்பின்றித் தூய மொழித் தொண்டே இவ்விதழ் மேற்கொண்டுள்ளமையின், அகம், நாடு, புலம், பொழில், வரைப்பு முதலிய இடப்பொருளீறின்றித் தூய மொழிப் பெயரே இதற்கு இடப்பெற்றுள்ளது.

தயிர் பாலினின்று திரிந்துள்ளதுபோல் திரவிட மொழிகள் தமிழினின்று திரிந்து ஓரளவு ஆரியத் தன்மை அடைந்துவிட்டமையாலும், வடவேங்கடந் தென்குமரி யிடைப்பட்ட பண்டைத் தமிழ்ச் சொற்களே தென்னாட்டுத் திரவிட மொழிகளில் சிறப்பாகப் பழஞ்சேர நாட்டு மொழியாகிய மலையாளத்தில் அடிப்படையாக மண்டிக்கிடப்பதாலும், இற்றைச் சோழ பாண்டி நாட்டு மொழியையும் தென்னாட்டுத் திரவிடத்தின் தமிழ்ப் பகுதியையும் ஒருங்கே தழுவுதற்கே தென்மொழி யென்னும் பெயர் இவ்விதழிற்கு இடப்பெற்ற தென்க.

ஆகவே, 'தமிழ்' என்பது தமிழை மட்டும் குறிக்குமென்றும், 'திரவிடம்' என்பது தமிழினின்று திரிந்த பிறமொழிகளையே குறிக்குமென்றும், தென்மொழி' என்பது அவ் விரண்டையும் குறிக்குமென்றும் வேறுபாடறிந்து கொள்க...

மொழிப்பற்றும் மொழிவெறியும்!

பெருஞ்சித்திரனார்

...தமிழ் நாட்டின் கண், இற்றை, மொழிப்பற்றும், நாட்டுப் பற்றும், இனப்பற்றும் பரவி வருகின்றன. தலைவனுள்ளிட்ட ஒவ்வொரு குடும்பத்திற்கும், குடும்பப்பற்றும், பொறுப்பும் இல்லாவிடில் குடும்பம் சீர்குலைந்து போவதுபோல், ஒரு நாட்டின் மக்களிடத்தும் தாய்மொழிப்பற்றும், இனப்பற்றும், நாட்டுப் பற்றும் இல்லாவாயின், நாட்டின் ஒற்றுமை குலைந்து, அடிமைத்தனம் ஓங்கி, உயர்வு கெடும் என்பது எவரும் மறுக்கவியலாது.

ஒருவன் தன் மொழி. இனம், நாடு இவற்றின் மேல் பற்றுக் கொள்ளுதல் எவ்வகையிலும் குற்றமாகாது. போற்றக்கூடிய தொன்றே. ஆனால், தன் மொழிப்பற்று, வேறு மொழிப் பகைமையையும், தன் இனப்பற்று, பிற இன வெறுப்பையும், தன் நாட்டுப்பற்று, பிற நாட்டுச் சிதைவையும் ஏற்படுத்திவிடுமானால், அப்பற்று அறிவற்ற வெறியே என்று அறிஞர் கொள்வர்.

தமிழ் நாட்டார் தமிழ்மீதும், தமிழ் நாட்டின்மீதும். தமிழர் மீதும் கொள்கின்ற பற்று, யாவர்க்கும் தீங்கு தராததொன்றே என்பதற்கு ஒரேவொரு சான்று போதுமானதாகும். அது. தமிழர் கடந்த ஐநூறு ஆண்டுக் காலமாக, பிற நாட்டார் தமிழ் நாட்டில் தம் தாய் மொழியொடு தமிழர் போன்றே வாழ இடந்தந்திருப்பதாகும்.

தமிழ் நாட்டார் இவ்வாறிருந்து வந்தது, பிறர்க்கு நல்லதே ஆயினும், அதன் முடிவு தமிழர்க்கும், அவர் மொழிக்கும், அவர் இனத்துக்கும் நீக்க வொண்ணுக் கேட்டையே விளைவித்தது; இதனைத் தமிழன் இப்பொழுது உணர்ந்தான்; உணர்கிறுன்.

இன்றுள்ள அரசியல் அமைப்பின் பெயரால், நம் நாட்டு அமைச்சரும், மொழிப்பற்றின்றி விழியிழந்து நிற்கின்றனர்; அவர் தமிழைத் தாழ்ந்ததாகவும், இந்தியை உயர்ந்ததாகவும் கொள்கின்றனர். எனவே, தமிழ்ப்பற்றுக் கொண்டவரைத் தூற்றுகின்றனர். மொழித்திறன் மிக்க அறிஞரையும், நாட்டுப் பற்று மிகுந்த இளைஞரையும், இனப்பற்று மிகுந்த பெரியோர்களையும் கட்சிச் சார்பில் வெறுத்து, அவர் தம் கருத்துகளைப் புறக்கணிக்கின்றனர். இதன் முடிவு அவர்க்கும், அவர் அமைச்சியலுக்கும் இறுதி பயக்கும் என்பதை அறிவுறுத்துகின்ருேம்.

(தென்மொழியின் 1958-ஆம் ஆண்டைய இவ்வெச்சரிக்கை போல் தமிழ்நாட்டில் பேராயக் கட்சி '67-இல் ஆட்சியினின்று கீழிறங்கியது கவனிக்கத்தக்கது. அது மீண்டும் இன்றுவரை ஆட்சியில் ஏறவே இல்லையென்பதும் இன்னும் கவனிக்கத்தக்கது.)

இனி, ஒரு வகுப்பார் தம் மொழி வளர வழி வகுக்காமல், தம் அரசியல் வலிமையால், பிறரின் இனிமையான மொழியை விலக்கி, அம்மொழியிருந்தவிடத்துத் தம் மொழியைப் புகுத்துதல் வெறிச் செயலாகும். இதற்கு வானொலி என்ற இன்சொல் இருக்க, 'ஆகாஷ்வாணி' என்னும் புன்சொல்லைப் புகுத்துதல் ஒரு சான்ருகும். பிறர் மொழியைப் புறக்கணிப்பதும், பிறர் விரும்பாத ஒரு மொழியை அவர் மேல் வலிந்து புகுத்துவதும், இவற்ருல் தம் மொழி வளர்ந்துவிடும் என்று எண்ணுவதும் வெறி கலந்த கழி மடமையே யாகும்.

இந்தியத் துணைக் கண்டம் பல்வேறு மொழிகளையும், இனங்களையும் கொண்டதாகும். ஆட்சி மகுடம் தாங்கும் ஓரினம் மற்ற இனங்களை மடக்குமாயின், ஒவ்வோரினமும் அடக்கலரிதாகி இடர் விளைக்கும் என்பது கருதத் தக்கது, ஓரிந்தியக் கொள்கை கொண்டு நாடாள்வோர், பிறர் விழியெனக் கருதும் சிறந்த ஒரு மொழியை அழித்திட முயல்வது, நாட்டுப் பிரிவினைக்கு வித்தாகும் என்றும், இது உடனே நிறுத்தப் பெருவிடில் அதையே கற்றவரும் மற்றவரும் மேற்கொள்ளுவர் என்றும் அவ்வாறு மேற்கொள்ளின் அதை அடக்குதல் இடக்குக் காளையை ஈர்க்குக் கொண்டு தாக்குதற் கொப்பாகும் என்றும் அறிவிக்க விரும்புகிருேம்.

வயிற்றுப் புலமை!

இந்நாட்டிலே ஒரு சிலர் தமிழில் புலமை பெற்றுத் தமிழால் வயிறு வளர்த்தும், தமிழால் பொருள் ஈட்டியும், தமிழால் எல்லாச் சிறப்புகளையும் அடைந்தும், அதனைப் பாராட்டாமல், வடமொழியில் அகர உகரம் அறியாதிருப்பினும், அதனையே சீராட்டியும் பாராட்டியும் வருகின்றனர்.

Scanned with CamScanner

"கம்பராமாயணப் பிரசங்கம்" என வாளா பெயர்வைத்துக் கொண்டு, வான்மீக முனிவருக்கு ஏற்றங்கூறிச் செல்வோர் பலர்; திருவள்ளுவர் திருக்குறளைப் பற்றிக் கூறப் புகுந்து மனுவின் அநீதிக்கும் அமைதி உரைப்பார் சிலர். அகப்பொருள் நூல்களை ஆராய்வார் போல் அவிநயங் காட்டி, வடமொழியில் காமசாத்திரம் மிக விரிந்தது என்று கையை விரிப்பார் சிலர்,

இதற்குக் காரணம், தமிழ் வடமொழியை அடியோடு ஏற்றுக் கொண்டு, அடிமையாகாமல் தனித்து நிற்கும் ஆற்றல் உண்மை, அவர்க்கு அழுக்காற்றை விளைத்ததலேயாகும். அந்தோ! இவர் செய்கை கொடுமையினும் கொடுமை! —மணி: திருநாவுக்கரசர்.

பொருட்கடனும் சொற்கடனும்!

பொருட்கடன் கொள்ளுதல் போன்றே, சொற்கடன் கோட்லும் தேவையும் தேவையின்மையும் ஆகிய இருவகை நிலைமைகளில் நேர்வதாகும்.

ஆங்கிலம் போன்ற மொழிகளில் சொல்வளமின்மையால், அவற்றிற்குப் பிற மொழிகளினின்று கடன் கோடல் இன்றியமையாததாயிற்று. தமிழ் பெருவளமொழியாதலின் அதற்குச் சொற்கடன் தேவையில்லை. தமிழில் இதுவரை புகுந்த அல்லது புகுத்தப்பட்ட அயற்சொற்களெல்லாம், அதன் வளத்தைக் குறைத்து, அதன் தூய்மையைக் குலைப்பதற்குக் காரணமாயிருந்தவையே.

இற்றைத் தமிழிற் கலந்துள்ள பிறமொழிச் சொற்களெல்லாம் தமிழர் தாமாக விரும்பிக் கடன் கொண்டவையல்ல. செந்தமிழ் காக்கும் நக்கீரர் மரபு அற்று, ஆரியம் போற்றும் கொண்டான் மரபு ஓங்கி, சேர, சோழ, பாண்டியர் ஆட்சியை வேறு பல நாட்டார் கவர்ந்து, மொழியுணர்ச்சியும் வரலாற்றறிவும் தமிழரிடை முற்றும் மறைந்த காலத்து, தமிழ்ப்பகைவரால் தமிழைக் கெடுத்தற் கென்றே புகுத்தப்பட்டவையாம். இது, ஒரு பேதையின் செல்வத்தைக் கவர்தற்கு, ஒரு சூதன் அவனுக்கு வலியக் கடன் கொடுத்து வட்டிமேல் வட்டிக் கணக்கெழுதிய தொத்ததே?

சொல்லும், பொருள்போல் ஒரு செல்வமே. ஒரு செல்வன் பொருளால் பெறும் நன்மையை, ஒரு புலவன் சொல்லால் பெறுகிறான்: முன்னோர் ஈட்டிய செல்வத்தைப் பெருக்குதற்குப் பின்னோரும் ஈட்டுவது போல், முன்னோர் ஆக்கிய மொழியை வளம்படுத்தற்குப் பின்னோரும் புதுச் சொற்களை ஆக்குதல் வேண்டும். இங்ஙனம் செய்யாது பிறமொழிச் சொற்களையே வேண்டாது கடன் கொள்பவர், தானும் தேடாது முன்னோர் தேட்டையும் கடனால் இழக்கும் முழுச் சோம்பேறியையே ஒப்பர்.

—ஞா: தேவநேயப் பாவாணர்:
தமிழ் கடன் கொண்டு தழைக்குமா?-கட்டுரை:

Scanned with CamScanner

மெய்யுணர்வாளன்!

மாற்றத்திற்கும் அழிவுக்கும் உட்படாமல் நிலையாயுள்ள மெய்ப்பொருள் எதுவோ அதனை அறியவேண்டும், அதற்கான கல்விப் பயிற்சி பெறவேண்டும் என்பதிலே ஆவலுடையவன் மெய்யுணர்வாளன். அவன் அதிலே ஒரு பகுதியைக்கூடத் தெரிந்து கொள்ளாது விட்டுவிடாமல் அந்த மெய்ப்பொருள் முழுவதையும் அறிய வேண்டுமென்று ஆவல் கொள்வான்; உண்மையைக் கடைப்பிடிக்கிற தன்மை இவனிடம் இயற்கையாகவே அமைந்திருக்கும். எது பொய்யோ, அதை இவன் மனமறிந்து ஏற்றுக் கொள்ளமாட்டான். அதை அப்படி ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதோடு வெறுக்கவும் செய்வான்.

மனத்திற்கு ஏற்படக்கூடிய இன்பத்தைத்தான் மெய்யுணர்வாளன் ஒருவன் தலையானதாகக் கருதுவானே தவிர, புலன்களுக்கு உண்டாகக் கூடிய இன்பத்தைப் பெரிதாகக் கருதமாட்டான். அவன் எப்பொழுதும் அமைதியாகவே இருப்பான். எந்தப் பொருளையும் தனதாக்கிக் கொள்ள விரும்பமாட்டான். எந்த நோக்கங்களுக்காக மக்கள் பணத்தைத் தேடுகின்றார்களோ, அல்லது செலவழிக்கிறார்களோ அந்த நோக்கங்களின் மீது அவன் மனம் செல்லாது. ஒரு மெய்யுணர்வாளன் பயனற்ற செயல்களில் அவன் கருத்தைச் செலுத்துவதில்லை. மாந்தத் தன்மையை முழுமையாகக் காணவேண்டுமென்ற ஆவல் நோக்கம் உடையவன். அவன் எல்லா உயிர்களையும் ஒன்றெனக் கருதுகிறான்; இறப்பைக் கண்டு அஞ்சமாட்டான்.

மிகுதியாக நினைவாற்றல், விரைவாகக் கற்றுணரும் திறன், உயர்ந்த மனப்பான்மை, எளிய தன்மை, வாய்மை, அறம், மறம், அமைதி ஆகிய இவற்றிடத்தில் உறுதியான பற்றுக் கொண்டவன் தான் மெய்யுணர்வாளனாக இருக்கமுடியும். அவன் தன்னுடைய நாட்டில் பெருமை செய்யப் பெறுவதில்லை. பொதுவாகவே உலக நடவடிக்கைகளைப் பொறுத்த மட்டில், மெய்யுணர்வாளன் பயனுடையவனாயிருப்பதில்லை. அஃது அவனுடைய குற்றமன்று; இவனைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளாமலிருக்கிறார்களே அவர் தம் குற்றமாகும். அதனால் மெய்யறிவாளரில் பெரும்பாலோர் இழிந்தவராகக் கருதப் பெறுகின்றனர்; சிறுபாலோர் பயனற்றவர்களாகக் கருதப் பெறுகின்றனர். மெய்யறிவாளனுடைய நற்குணங்களே அவனை இழிநிலைக்குக் கொண்டு வந்து விடுகின்றன. சரியான சூழலில்லாமற் போனால் கெட்டதைவிட நல்லதுதான் அதிகமாகச் சீரழிந்து போகின்றது.

மெய்யுணர்வாளன் தீய சூழல்களின் இடையில் இருக்க முடியாதவனாகி ஒதுக்குப் புறமாக இருந்து வாழ்க்கை நடத்துகின்றான்; பெரும்பாலான மக்களின் பைத்தியக்காரத்தனத்தையும், மற்ற அரசியல் நடவடிக்கைகளின் இழிதகையையும் இவன் எளிதாகப் பார்க்கிறான். நேர்மைக்காகப் பாடுபட வேண்டுமென்று இவன் பெரிதும் முயற்சி செய்வதால் இவனுக்குத் துணை-

யாக எவரும் இருப்பதில்லை: கொடிய விலங்குகள் வாழும் காட்டிலே அகப்பட்டுக் கொண்ட மாந்தனைப்போல் இவன் நிலைமை இருக்கின்றது. மற்றவருடைய நேர்மையற்ற செயல்களில் இவனால் பங்கு கொள்ள முடிவதில்லை. அவர் தம்மை எதிர்த்துப் போராடக்கூடிய வன்மையும் இவனுக்கு இருப்பதில்லை. ஏனென்றால் எல்லாருமே காட்டு விலங்குகளாய் இருக்கும் பொழுது, இவன் தனியே இருந்து என்ன செய்ய முடியும்? தன்னுடைய நாட்டிற்கோ, அல்லது தனக்கோ, தன்னுடைய நண்பர்களுக்கோ ஏதேனும் நன்மை செய்வதற்கு முன்னரேயே இவன் தன் உயிரை இழந்துவிட வேண்டியவனாய் இருக்கிறான். இதனால், இவன் தனக்காகட்டும், உலகத்திற்காகட்டும் பயனற்றவனாகப் போய் விடுகிறான். இவற்றையெல்லாம் எண்ணித்தான் இவன் மன அமைதியுடன் தன்னுடைய வேலையில் மட்டும் நாட்டங் கொண்டு செல்கிறான்.

மண் காற்றடிக்கின்ற பொழுது, எப்படி ஒருவன் சுவருக்குப் பின்புறமாக ஒதுங்கிக் கொள்வானோ அதைப்போல் இவன் ஒதுங்கியிருந்து வாழ்க்கை நடத்துகிறான். மற்றவர்களுடைய நேர்மையற்ற செயல்களை இவன் நன்றாகப் பார்க்கிறான். அச்செயல்களின் கறை தன்மீது படாமல் தன் வாழ்க்கை நடைபெற்றுவிட்டால், அஃதொன்றே போதும் என்று இவன் கருதி அதன் வழியே நடந்து இறுதியில் மனநிறைவோடு இவ்வுலகத்தினின்று அகன்றுவிடுகின்றான்.

—சாக்ரடீசு

வருஷமும் ஆண்டும்!

வருஷம்: வடமொழியில் (சமசுக்கிருதத்தில்) 'வர்ஷ்' என்றால் மழை என்று பொருள். ஒரு மழைக் காலத்திற்கும் மற்றொரு மழைக் காலத்திற்கும் உள்ள இடைக்காலம் ஏறத்தாழ ஓராண்டாதலின் 'வர்ஷம்' ஓராண்டுக்குரிய பெயராயிற்று.

ஆண்டு: மேலை மலைத்தொடர் (மேற்குத் தொடர்ச்சி மலை)ப் பகுதிகளில் வாழும் மலைவாழ்மக்கள் பெருவாரை இனத்தைச் சேர்ந்த குறிப்பிட்ட ஒரு மூங்கில் முளையை 'ஆண்டு' என்கின்றனர். அம்மூங்கில் முளை சரியாக 365 நாள்களுக்கு ஒரு முறை தான் முளைக்கும் என்பர். ஆண்டு முளைத்தால் ஓராண்டு நிறைந்தது என்று பொருள். தமிழர்கள் பழங்காலத்தில் இந் நுட்பம் அறிந்து ஓராண்டுக் காலத்திற்கு 'ஆண்டு' எனப் பெயரிட்டிருப்பது வியக்கத் தக்கது.

(குறிஞ்சிப்பூ மலரும் காலத்தைத் தமிழர்கள் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை என்று கண்டறிந்து கணக்கிடல் போல், இந்த மூங்கில் முளை ஆண்டுக் கணக்கும் காலக்கணக்கிட்டு வழக்கிற்கு வந்தது போலும்!)

—செழியன்

பெரியாரின் பெருந்தொண்டர் 'டார்பிடோ' சனார்த்தனம்!

— பெருஞ்சித்திரனார்

1955-ஆம் ஆண்டு. புதுவையில் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் திருமகன் மன்னர் மன்னன்-சாவித்திரி திருமணம். அறிஞர்கள், புலவர்கள், அரசியல் தலைவர்கள், அன்பர்கள், உறவினர்கள் எனப் பலரும் திருமணத்திற்கு வந்திருந்தனர். கோவை அய்யாமுத்து தலைவர். திருமணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர், தமிழ் மறவர் வை. பொன்னம்பலனார், தொண்டு வீராச்சாமி, 'டார்பிடோ' சனார்த்தனம், நான் ஆகியோர் பந்தலில் ஒரு மூலையில் அமர்ந்து கொண்டு பலவாறான, அரசியல், இலக்கியம், மொழியியல் செய்திகளைப் பேசிக் கொண்டிருந்தோம். எங்களுடன் பாவேந்தரும் வந்து கூட அமர்ந்து கொண்டு கருத்துகளைப் பரிமாறிக் கொண்டிருந்தார். பெயரால் அறிமுகம் ஆகியிருந்தவர்கள் அன்றுதான் முகத்தால் அறிமுகம் ஆனோம். இங்குதான் 'டார்பிடோ' அவர்களை நான் முதன் முதல் கண்டு பேசியது. அதற்கு முன் கூட்டங்களில் அவரை நான் கண்டிருக்கின்றேன். அப்பொழுது திராவிடர் கழக மாணவர் தலைவர், அவர். பெரியாரின் கொள்கைகளை மேடையேறி வீறு பெற முழக்கியதைப் பல முறை கேட்டு மகிழ்ச்சியும் நிறைவும் பெற்றிருக்கின்றேன். மாணவப் பருவத்திலிருந்தே அரசியலைக் கரையிலிருந்தே கவனித்து வருபவன் நான். நேர்மையும் உண்மையும் ஒழுக்கமும் இல்லாத அரசியல்காரர்களிடம் தொடர்பு கொள்வதே எனக்குப் பிடிக்காது. ஆனால், உண்மையான கொள்கை உணர்வாளர்களையும் நேர்மையானவர்களையும் ஒழுக்கமுள்ளவர்களையும் எனக்குப் பிடிக்கும். அத்தகையவர்களை மதிக்கவும் செய்தேன். அவ்வாறு எனக்குப் பிடித்தவர்களுள்ளும், நான் மதிக்கத் தகுந்தவர்களுள்ளும் தலையாயவர்—என் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தவர் 'டார்பிடோ' சனார்த்தனம் அவர்கள் என்றால் மிகையாகாது.

எனவே, அந்தத் திருமணச் சந்திப்பில் அவரிடம் மிக நெருங்கியே பேசினேன்; பழகினேன். அவருடைய கள்ளம் கவடற்ற அரசியல் பூசல் கலவாத தூய கொள்கை உணர்வைப் பெரிதும் மதித்தேன். நேரிடையாகப் பாராட்டவும் செய்தேன். ஆனால், அவரிடமும் அவரைப் போன்ற தீவிரத் திராவிடக் கொள்கையாளரிடமும் எனக்குப் பிடிக்காத ஒரே ஓர் உணர்வு பெரியார் சொல்வன அத்தனையும் சரி என்று கண்ணைமூடிக்கொண்டு ஒப்புக் கொள்வதுதான். கொள்கைப்பற்றும் தலைமைப்பற்றும் தொண்டன் ஒருவனுக்குக் கட்டாயம் இருக்கவேண்டியனவே; ஆனால், கருத்துகளில் உறுதியான ஆய்வுணர்வு தேவை; 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப் பொருள் காண்பது அறிவு' அன்றோ! அவ்வறிவு பகுத்தறிவாக

இருக்கவேண்டும் என்றால், இன்னமும் அறிவாய்வு தேவை. அக் கருத்தாய்வு, முன் கொள்கையையே சிறிது மாற்றியமைத்துக் கொள்ளும் அளவுக்கு வளர்ச்சியுறுவதானாலும் சரியே.

நம் 'டார்பிடோ' பெரியார் கொள்கையை யாரினும் மேலாக மதிப்பவர்; போற்றுபவர்; கடைப்பிடிப்பவர். பெரியாரை ஒரு சிறிய அளவு குறைத்துப் பேசினாலும் அவருக்குப் பிடிக்காது. இவரின் இந்த உணர்வு அறிவுடன் கலந்த நன்றியுணர்வாகவும் இவரிடம் திகழ்ந்திருந்தது. எனவே 'டார்பிடோ'வை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அவரிடம் கொள்கையளவில் கருத்தாய்வு செய்ய வேண்டும் என்று எண்ணினேன்.

திருமணச் சந்தடிகள் எல்லாம் ஒருவாறு அடங்கி, விருந்தும் முடிந்தது. பொன்னம்பலனாரும் பாவாணரும் முறையே உயர்நிலைப் பள்ளியிலும் கல்லூரியிலும் எனக்கு ஆசிரியர்கள். தொண்டு வீராச்சாமி என் நண்பர். அக்கால் அவர் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்தார். இம் மூவரும் திருமணத்திற்கு வருகிறார்கள் என்பது எனக்கு முன்பே தெரியும். ஆதலால், அவர்களுக்கு அன்று இரவு நம் வீட்டில் நல்ல விருந்து ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தேன். சனார்த்தனம் அவர்களும் அங்கு வந்திருந்ததால், அவரையும் வீட்டிற்கு வரும்படி அழைத்தேன். அவரும் மகிழ்வுடன் எங்களுடன் புறப்பட்டார். ஐவரும் பேசிக் கொண்டே பாவேந்தர் வீட்டிலிருந்து ஒரு படைச்சால் (பர்லாங்) தொலைவிலிருந்த நம் வீட்டிற்குச் சென்றோம்.

அங்கு ஓய்வு எடுத்துக் கொண்டே, பற்பல கருத்துரையாடல்கள் நடந்தன. இறுதியில் பாவாணரிடமும் பொன்னம்பலனாரிடமும் வீராச்சாமியிடமும் நடந்த பேச்சுகளைக் குறைத்து 'டார்பிடோ' அவர்களிடம் கருத்துப் போரில் ஈடுபட வேண்டியதாகப் போயிற்று. அக் கருத்துப்போர் வியப்பான விறுவிறுப்பான ஒரு கொள்கையைப் பற்றியது. அது பெரியார் திராவிட நாடு கேட்பது தவறு என்பது. இக்கருத்தை நான் வெளிப்படுத்தியதும் 'டார்பிடோ'வும் பொன்னம்பலனாரும் என்னிடம் தீவிரமாக மோதினர். என் பெருமதிப்புக்குரிய ஆசிரியரும் கொஞ்சமும் குறைவிலாத தீவிரப் பெரியார் பெருந்தொண்டர், முதியவர். இருப்பினும் என் ஆசிரியர் என்ற பாங்கில், அவரிடம் மிகுதியும் போராடாமல், 'டார்பிடோ' அவர்களை மிகக் கடுமையான கருத்துகளுடன் எதிர்த்தேன். மாலை 5 மணியளவில் தாம் தில்லி போகவேண்டும் என்று வீராச்சாமி எங்களிடமிருந்து பிரிந்தார். உணவுக்குப் பின் இரவு முழுவதும் எங்களின் கருத்துப் போர் தொடர்ந்தது. பொன்னம்பலனாரும் பாவாணரும் இரவு 10 மணியளவிலேயே ஓய்வு கொண்டனர். நானும் 'டார்பிடோவும்' வெகு மும்முரமாகப் போராடிக் கொண்டிருந்தோம். இத்தனைக் கருத்துப் போராட்டங்களுக்கிடையிலும் இருவரும் ஒருவரை ஒருவர் அறிவைக் குறைத்தோ பண்பைக் குறைத்தோ ஒரு சொல்லையும் வெளிப்படுத்திக் கொள்ளவில்லை. பெரியாரின்

மூலக் கொள்கையிலேயே கை வைத்ததுதான் 'டார்பிடோ'-விற்குப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. என் கருத்துகள் அவர்க்குப் பெருஞ்சினத்தை மூட்டின. என் தொகு மொத்தமான கருத்து இதுதான்.

''திராவிடம் எனும் சொல்லைப்பார்ப்பனர் தமிழ்மொழியைக் குறிக்கவே பயன்படுத்தினர். தமிழம் என்னும் சொல்லே திரவிடமாகத்திரிந்தது. பவளம் 'பிரவாள'மாகத் திரிந்தது போலவே, மதங்கம் 'மிருதங்க'மாகத் திரிந்தது போலவே, தமிழம் திரமிளமாகித் திரவிடமாகத் திரிந்தது. ஆனால் கால்டுவெல்தாம் திரவிடம் என்னும் சொல்லைத் தமிழல்லாத பிற திசை மொழிகளுக்குப் பயன்படுத்தி, அதன் பின் அம்மொழிகள் வழங்கும் இனத்திற்கும் பயன்படுத்தினார். எனவே திரவிடம், திராவிடம் என்று இனத்தைக் குறிப்பது பொருந்தாது. மேலும் திரவிட மொழிகள் ஏறத்தாழ முப்பத்தாறு மொழிகள். அவற்றுள் பாரசீகமும் சுமேரிய மொழியும்கூட திரவிட மொழிகளே! இவற்றைப் பேசியவர்களும் பேசுபவர்களும்கூட திராவிடர்களே! இவ்வாறு பார்த்தால் திராவிட நாடு பாரசீகம் வரை-சுமேரியா வரை பரவியுள்ளது. எனவே அவற்றையெல்லாம் உள்ளடக்கியே 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்று நாம் கூறுதல் வேண்டும். இவற்றையெல்லாம் விட்டு-விட்டு, வெறும் தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்னும் மொழியினங்கள் வாழும் நாட்டுப் பரப்பையும் தமிழ்நாட்டையும் மட்டும் சேர்த்து நாம் திராவிடநாடு என்று சொல்வதில் பொருளும் இல்லை; அது சரியும் இல்லை. மேலும் நம்முடன் எப்பொழுதும் ஆந்திரரும், கன்னடரும், கேரளரும் ஒன்றுபட்டு ஒரே ஆட்சியின் கீழ் வாழ ஒருப்படார். அவர்கள் நம்மினின்று மொழியளவில் பிரிந்து இன அளவில் வேறுபட்டு நாட்டளவில் பிரிந்துகிடப்பவர்கள். அவர்கள் மொழியால் சமசுக்கிருதத்தையும் இனத்தால் நம் எதிரி இனமான ஆரியர்களையும் நேசிப்பவர்கள். இன்னும் தெளிவாகச் சொன்னால் அவர்கள் ஆரியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடப்பவர்கள். என்றென்றும் அவ் வடிமைத்தனம் மாறி நம்முடன் இணைய அவர்கள் விரும்ப மாட்டார்கள். இன்னொன்றையும் நாம் கவனிக்கவேண்டும். அவர்கள் சமசுக்கிருதத்துடன் உள்ள தொடர்பையும் ஆரியர்களுடன் கொண்ட கூட்டுறவையும் என்றைக்கும் கைவிட மாட்டார்கள். அவ்வாறு அவர்கள் செய்வார்களானால் அவர்களின் தெலுங்கு, கன்னட,மலையாள மொழிகள் தமிழ்மொழியாகிவிடும்; அவர்களும் தமிழர்களாகிவிடுவர்; அவர்கள் அனைவரும் ஆரியர்க்கு முன்னர் வாழ்ந்த பழந்தமிழ இனத்தைச் சேர்ந்தவரே ஆவர். ஆரியங் கலந்த பின்பே மொழியால் வேறுபட்டு இனத்தால் மாறுபட்டுப் போயினர். இந்நிலையில் அவர்கள் தங்கள் முந்து நிலைக்கு வருவது மிகமிகக் கடினமானது மட்டுமன்று; அது நடவவும் நடவாது. எனவே பெரியார், 'திராவிட நாட்டுக் கொள்கையை' அமைத்திருப்பது மிகவும் தவறானது; வரலாற்றறிவில்லாதது. ஆகவே இதைத் தவிர்த்து விட்டுத் 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்று பெரியார் முழங்குதல்

வேண்டும். அதுதான் சரியானது; உண்மையானது; நடக்கு முடிவது.''

இந்த என் கருத்தை, நம் 'டார்பிடோ' அவர்கள் பல நிலைகளில் மறுக்க முயன்றார். கொள்கையை விட்டுக் கொடுக்கக் கூடாதென்ற உணர்வில் விடாப்பிடியாக என் கருத்துகளை ஒப்புக் கொள்ள மறுத்தார். என் கருத்துகளுக்கு எதிர்கருத்தாக அவர் கூறிய கருத்து ஒன்றுதான். அஃது இது:

''திராவிட நாட்டுக் கொள்கையின் முந்தைய வரலாறு எவ்வாறிருப்பினும், இன்றைய நிலையில் ஆரியத்தையும் வடநாட்டு இந்திக்காரர்களையும் நாம் எதிர்க்க வேண்டுமானால், தென்னாட்டில் உள்ள நான்கு திராவிட இனத்தவர்களும் ஒன்று சேர்ந்தே ஆகவேண்டும். அவர்களை ஒன்று சேர்க்க வேண்டுமானால் திராவிடக் கொள்கைதான் சரியானது. தமிழ் நாட்டுக் கொள்கை சரியானதன்று; தமிழ்நாடு என்றால் அவர்கள் ஒத்து வர மாட்டார்கள்.''

இக்கருத்தையே அவர் திருப்பித் திருப்பி அழுத்தந் திருத்தமாக வலியுறுத்திப் பேசினார். அவருடைய உணர்வில், ''பெரியாரின் கொள்கையை அவ்வளவு எளிதில் விட்டுக் கொடுத்துவிடக் கூடாது'' என்பதும், ''பெரியாருக்கு இவையெல்லாம் விளங்காமலா இருக்கும்'' என்பதும் தெளிவாகப் புலப்பட்டன. இக்கருத்துப் போராட்டம் விடியற்காலை நான்கு மணியளவில் தொடர்ந்து நடைபெற்றது. இறுதியாகப் பின் வரும் கருத்தைக் கூறி எங்கள் போராட்டத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தேன்.

''ஐயா, நான் இப்பொழுது உறுதியாகக் கூறுகிறேன்: பெரியார் அவர்களிடம் எனக்குள்ள மதிப்பும் பேரன்பும் கொஞ்சமானதல்ல. அவர்களையே தமிழகத் தலைவர்கள் அனைவரினும் மேலாக நான் மதிக்கிறேன். அவர்கள் இல்லையானால் இத்தமிழினம் எவ்வளவு தட்டுக் கெட்டுத் தலைமாறிப் போயிருக்கும் என்று நான் நினைத்துப் பார்ப்பதற்கும் அச்சமாக இருக்கிறது. நான் எந்தக் கட்சியிலும் போலவே திராவிடர் கழகத்திலும் உறுப்பினன் அல்லன். ஆனாலும் பெரியாரை மட்டுமே தமிழினத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிறேன். இப்பொழுதுள்ள எவருக்கும் அந்தத் தகுதியை என்னால் கொடுக்க இயலாது. என்றாலும் அவரின் திராவிட நாட்டுக் கொள்கை தவறு என்பது வரலாற்று உண்மையானது; உறுதியானது. பெரியாரே இந்த உண்மையை இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளில் விளங்கிக் கொண்டு, 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்ற கொள்கையைத் தூக்கிப் பிடிப்பார் என்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது. நீங்களும் அப்பொழுது நான் சொல்வதை ஒப்புக் கொள்வீர்கள்.''

இக் கருத்தை அன்று நான் 'டார்பிடோ' அவர்களிடம் மிக உறுதியாகவும் அதே பொழுது மிக அன்பாகவும் சொன்னேன்.

அதன் பின், மறுநாள் அனைவரும் அன்புடன் பிரிந்தோம்: அது முதல் 'டார்பிடோ' சனார்த்தனம் அவர்களுக்கும் எனக்கும்

உள்ள நட்பு பன்மடங்கு வளர்ந்தது. மிக நெருக்கமானது; அவ்வாறே அவர்க்கு என் மேலும் எனக்கு அவர் மேலும் உள்ள அன்பும் மதிப்பும் பன்மடங்கு உயர்ந்து விளங்கின. இந்நிலை இறுதி வரை இருந்தது;

நான் அன்று குறிப்பிட்டது போலவே ஒருசில ஆண்டுகளுக்குப் பின், பெரியார், தம் விடுதலை இதழின் தலைப்பில் வெளிப்படுத்தி வந்த 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்னும் கொள்கை முழக்கம் நீங்கி, 'தமிழ்நாடு தமிழர்க்கே' என்னும் கொள்கை பொறிக்கப் பெற்றது.

அதன் பின், நம் சனார்த்தனம் அவர்கள் மீண்டும் நம் இல்லத்திற்கு வந்தார். அது திராவிடர் முன்னேற்றக் கழகத்திலிருந்து திரு. ம. கோ. இராமச்சந்திரன் (எம். ஜி. ஆர்.) பிரிந்த பொழுது. அப்பொழுது நம் குடும்பம் கடலூரில் இருந்தது. வந்தவர், ''நீங்கள் உடனே சென்னை சென்று கலைஞரைப் பார்க்கவேண்டும். இ ரா ம ச் ச ந் தி ர ன் தி.மு.க.விலிருந்து வெளியேறியதால், கலைஞர் மிகவும் மனமுடைந்து சோர்வுற்றிருக்கிறார். இந்த நேரத்தில் உங்களின் ஆறுதல் மொழிகளையும் ஊக்கவுரைகளையுந்தாம் அவர் கேட்பார்; உங்களிடம் அவர்க்கு நல்ல மதிப்பும் அன்பும் உண்டு'' என்று என்னிடம் அன்போடும் அக்கறையோடும் கூறினார்;

அவர் கூறியது போலவே, உடனே நான் சென்னை வந்து கலைஞரைப் பார்த்தேன்; ஆறுதல் கூறினேன்; ஊக்கவுரைகளும் சொன்னேன். கலைஞரும் என்னை அன்புடன் வரவேற்று நான் கூறிய ஆறுதலால் பெரிதும் அக மகிழ்ந்தார்;

1974-க்குப் பின்னர் நம் குடும்பமும் 'தென்மொழி' அச்சகமும் சென்னைக்கே வந்தன. அன்றுமுதல் அவருடனான சந்திப்பு அடிக்கடி நிகழ்ந்தது. ஒருவரையொருவர் சந்திக்கும் பொழுதெல்லாம் பல்வேறு அரசியல் செய்திகளை, இனநலச் சிந்தனைகளை நீண்ட நேரம் பரிமாறிக் கொள்வோம். இறுதிவரை அவர் நான் இல்லையென்றாலும் என் இல்லம் வந்து போய்க் கொண்டிருந்தார்; என் குடும்பத்தாருடன் அன்புடன் பேசியிருந்து விட்டுச் செல்வார். சில நேரம் அவருக்காக என் குடும்பத்தாரை விருந்து செய்யச் சொல்லி, பேசிக் கொண்டே அவருடன் இருந்து உண்பது எனக்குப் பேரின்பமாக இருந்தது.

அவர் மனத்தால் ஒரு குழந்தையைப் போன்றவர்; அறிவால் ஒரு பேரறிஞர்! கொள்கையால் ஒரு வீரர்! பண்பால் மிக உயர்ந்த சான்றோர்! ஒழுக்கத்தால் ஒரு குணக்குன்று! அவரைப் போல் ஒரு கொள்கையாளரை நாம் பார்ப்பது கடினம். அவர் அகத்தும் புறத்தும் பெரியாரின் ஓர் உண்மையான பெருந்தொண்டர்! அவர் புகழும் வீரமும் அறிவாக்கமும் என்றும் நிலைத்து நிற்கும்! அவர் வாழ்க! ஃ

Scanned with CamScanner

செய்திகள்!

1. சுமதி—இராசகோபால் வாழ்க!
அல்லி—சீத்தாராமன் வாழ்க!

நிகழும் தி. பி, 2020, மடங்கல் (ஆவணி) திங்கள் (15-9-89) வெள்ளிக் கிழமை, காலை 9 மணியளவில், திருத்தவத்துறை என்று அழைக்கப் பெற்ற இலால்குடி வட்டம், அரியூர் மருத்துவர் அ. கா. பிச்சை-மனோரஞ்சிதம் இணையரின் மகள் செல்வி. சுமதி, அறி. இ.-க்கும், அரியலூர் வட்டம், மேலப்பழூர் அ. இரா. பெருமாள் இணையரின், மகன் செல்வன், மருத்துவர். இராசகோபால் அவர்களுக்கும்,

இலால்குடி வட்டம், அரியூர் அ.கா. அருணாசலம்—மனோரஞ்சிதம் இணையரின் மகள் செல்வி. அல்லிக்கும் எசனைக்கோரை நா. சுப்பிரமணியன்—சு. முத்துலட்சுமி இணையரின் மகன், செல்வன். சீத்தாராமன் அவர்களுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் தமிழ்த் திருமணங்கள் இனிதே நடைபெற்றன.

நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டு மணமக்களை, உயர்திருவாளர்கள் புலவர் க. முருகையா (முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், இளங்காடு), குழ. செல்லையா (முன்னாள் அ. தி. மு. க. சட்டமன்ற உறுப்பினர்), செல்வராசு (முன்னாள் தி. மு. க. நாடாளுமன்ற உறுப்பினர்), புதுக்கோட்டை மன்னர் கல்லூரி தமிழ்ப் பேராசிரியர். மங்களர்ராசு க. மு., வேளாண்துறை உதவி இயக்குநர் இராசசேகரன் அறி. இ., இலால்குடி ஒன்றிய தி.மு.க. செயலாளர் பி. முருகேசன், அரியூர் இராமசாமி—ஆகியோர் வாழ்த்தி நல்லுரை வழங்கினர்.

2. தந்தை பெரியார் 111-ஆவது பிறந்தநாள் விழா:

கடந்த 17—9—89 மாலை 7 மணியளவில், புதுச்சேரி, கதிர்காமம் பகுத்தறிவாளர் கழகச் சார்பில், தந்தை பெரியார் 111-ஆவது பிறந்தநாள் விழாவும், காலஞ்சென்ற, பெரியார் பெருந்தொண்டர் எசு. என். சாமிநாதன் அவர்களின் 77-ஆவது பிறந்தநாள் விழாவும் ஒருங்கே சிறப்புடன் கொண்டாடப் பெற்றது. நிகழ்ச்சிக்கு திரு. அ.சம்பந்தம் தலைமை தாங்கினார். புதுவை மாநிலம் தி. க. செயலாளர் அ. ஆறுமுகம் முன்னிலை ஏற்றார். ப. தயாளன் வரவேற்புரை செய்தார்.

தொடக்கத்தில் தந்தை பெரியாரின் சிறப்பியல்கள் பற்றியும், பெரியார் பெருந்தொண்டர் எசு. என். சாமிநாதன் பற்றியும், சட்டமன்ற உறுப்பினர் பி. புருசோத்தமன், திருக்குறள் பெருமாள், எம். ஏ. சண்முகம், பகுத்தறிவு ஆசிரியர் அணிப் பொதுச் செயலாளர் சு. நடராசன், தொழிற் சங்கத் தலைவர் எம். மஞ்சினி, எம். ஏ. குப்புசாமி, தொழிற் சங்கச் செயலாளர் துரை. ஆறுமுகம், எசு. அப்பர்சாமி, புதுவை தி. க. தலைவர்

மு. துரைசாமி, தமிழினப் பாதுகாப்புக் கூட்டமைப்புத் தலைவர் புலவர் நதி, எசு. என். சாமிநாதன் அவர்களின் மூத்தமகனார் சா. சிவா ஆகியோர் உரையாற்றினர்.

இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் பெரியாரின் முக்கால் நூற்றாண்டு இனநல, நாட்டு விடுதலைத்தொண்டு பற்றியும், பெரியார் பெருந்தொண்டர் எசு. என். சாமிநாதன் அவர்களின் பகுத்தறிவுத் தொண்டு, பெரியாரின் அரும் பெருந் தொண்டிற்குத் துணையிருந்த ஈக (தியாக) வாழ்க்கை பற்றியும் விளக்கமாக நீண்ட நிறைவுரையாற்றினார். பெரியார் பற்றி அனைவரும் ஒரே படியாக—சடங்குபோல்-பாராட்டுரை, புகழுரை வழங்குகின்ற நிலையில்—பெரியாரால் தமிழினத்திற்கு நேர்ந்த, நேரவிருக்கின்ற இனநல, நாட்டு நலன்களைப் பாவலரேறு விரிவாகவும் செறிவாகவும் பேசியது, எல்லாரையும் வியப்புறச் செய்தது.

இறுதியில் 12 மணியளவில் பெரியார் பெருந்தொண்டரின் 2-ஆவது மகனார் திரு. சா. நெடுஞ்செழியன் நன்றி கூறி நிகழ்ச்சியை இனிதே நிறைவு செய்தார்.

3. செந்தமிழ்ச் சோலை-மணலி. தொடக்க விழா:

கடந்த 2-10-89 திங்கள் மாலை 6-30 மணியளவில், சென்னை—103, மணலி புது நகரில், உள்ள காமராசர் மாளிகையில், செந்தமிழ்ச் சோலை என்னும் புதிய அமைப்பின் தொடக்க விழா நடை பெற்றது. விழாவிற்கு மன்றத் தலைவர் தா. தமிழ்மாறன் தலைமை தாங்கினார். ப. தமிழ்ச் செழியன் வரவேற்புரையாற்றினார். தலைவர் முன்னுரைக்குப் பின் திருவாளர்கள் பாவலர் ம. தென்முகநம்பி, தலைவர் மு. தமிழ்மணி, பேரா. இரா. சொக்கலிங்கம், க. அன்புக் குமார், முனு, சுப்பிரமணி, ஆகியோருக்குப் பின் வழக்கறிஞர் சோதி பிரகாசம், திருக்குறள்-மணி, புலவர். இறைக்குருவனார் இருவரும் வாழத்துரை வழங்கினர். இறுதியில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் தமிழ் மொழியின் சிறப்பியல்கள், தமிழின வரலாற்றுச் சிறப்பு நிலைகள், தமிழினம் இன்றுள்ள தாழ்ச்சி நிலைகள், மொழியையும் இனத்தையும் மேம் படுத்தும் முறைகள் முதலியவை பற்றி ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் சொற்பொழிவாற்றினார். இறுதியில் மன்ற இணைச் செயலர் சு.திருவாணன் நன்றியுரையுடன் நிகழ்ச்சி இரவு 10 மணியளவில் நிறைவுற்றது.

4. தமிழோசை நற்பணி மன்றம்-செயங்கொண்டம்.

திருச்சி மாவட்டம், செயங்கொண்டத்தில், தமிழோசை நற்பணி மன்றத்தின் விழா 15—10—89 ஞாயிறு மாலை 6-30 மணியளவில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் சிறப்-புரையாற்ற இனிதே நடைபெற்றது. விழாவின் தொடக்கத்தில், தமிழோசை நற்பணி மன்றச் செயலாளர் ந. கோவிந்தசாமி

அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். புலவர் திரு. ந. கிருட்டிணமூர்த்தியவர்கள் தம் தலைமையுரையில் மன்றச் செயல் வீரர்களைப் பாராட்டியும், 'பாவலரேறு' ஐயா அவர்களின் தமிழின, தமிழ்நாட்டு உணர்வினைப் பெரிதும் வியந்து "பாவலரேறு" ஐயா அவர்களின் அறிவுசான்ற பேச்சினைக் கேட்க ஆவலாக இருக்கிறேன் என்று பேசியும் அமர்ந்தார்கள். பிறகு மன்றச் செயல் வீரர் திருமிகு மருத-மு-நாவளவன் அவர்கள் மன்ற அமைப்பினையும், மன்றம் நிகழ்த்திய கட்டுரைப் போட்டியின் சிறப்பினையும் தெளிவாகப் புலப்படுத்தினார். பிறகு 6-50 மணியளவில் 'பாவலரேறு' ஐயா அவர்கள் சிறப்புச் சொற்பொழிவைத் தொடங்கினார்கள். தொடங்கிய உடன் "தமிழ்ச்சிட்டு" ஏடுதான் தன்னை வளர்த்தெடுத்த இதழ் என்று கூறி திரு. மு. இளங்கோவன் அவர்கள் சிவப்புக் கைத்தறி ஆடையை உவப்போடு 'பாவலரேறு' ஐயாவிற்கு போர்த்தி மகிழ்ந்தார். பிறகு "பண்பாட்டுப் பேரவை"யைச் சார்ந்தவர்கள் பாவலரேறு ஐயாவிற்கு மலர்மாலை அணிவித்தனர்.

தமது சிறப்புச் சொற்பொழிவில் ஐயா அவர்கள் "இன்றைய அறிவியல் வளர்ச்சியினை முதலில் கூறி, இவ்வளர்ச்சிக்கு முன்பாகவே, தமிழர்கள் அறிவியலில் முன்னேறி இருந்தனர் என்பதைக் கழக இலக்கியங்களை மேற்கோள் காட்டிப் பேசினார்கள். மேலும் மாந்தன் முதன்முதலாக" இலெமூரியாவில்தான்' பிறந்தான் என்று கூறித் தொன்மையான வரலாறுகளை மாந்தநூல், நிலநூல், வரலாற்று நூல்களின் சான்று காட்டி மக்களுக்குச் சிறப்பாக உணர்த்தினார்கள். மேலும் தமிழர்களின் ஒற்றுமையின்மையினைக் கண்டு வருந்தி, அனைவரும் ஒன்றுபட்டுத் தமிழ் வரலாற்றை உண்மையுடன் புதுப்பிக்க வேண்டும் என்றும் கூறினார்கள்.

பல்வேறு வகையான வேர்ச்சொற்களைக் காட்டி உலக மொழிகள் அனைத்திலும் தமிழின் மூலச்சொற்கள் உள்ளன என்பதை விளக்கிக் காட்டி எளிய மாந்தர்களும் உணரும்படி செய்தார்கள். இறுதியாகத் தமிழோசை நற்பணி மன்றத்தின் பணிகளைப் பாராட்டி ஐயா அவர்கள் தம் பேச்சை நிறைவு செய்து கொண்டார்கள்.

விழாவின் இறுதியில் தமிழ்நாடு அளவில் மன்றம் நிகழ்த்திய கட்டுரைப் போட்டியில் பரிசுபெற்ற மாணவர்களுக்குப் பாவலரேறு ஐயா அவர்கள் பரிசு வழங்கினார்கள். விழா இறுதியில் 'பலகுரல்' நிகழ்ச்சி ஒன்றும் நடைபெற்றது. அனைத்து மக்களும் தமிழர்களின் வரலாற்றுச் சிறப்பின் உண்மையை உணர்ந்து மகிழ்ந்த வண்ணம் சென்றனர். இறுதியில் மன்றத் துணைத் தலைவர் வை. பாலு நன்றி கூறிட இரவு 10-30 மணியளவில் நிகழ்ச்சி நிறைவுற்றது.

—செய்தி—"இளம்பாவாணன்"

Scanned with CamScanner

பல்லவன் அவர்களும் நானும் கேட்டுக் கொள்கிறோம். நூறுபடி-கள் வாங்கி வழங்க முடிவு செய்துள்ளோம். தங்கள் அன்புமறவா,

—வ. வேம்பையன், கல்பாக்கம்.

○ : 1389 : அன்பும் ஆன்ற புலமையும் அமைந்துள்ள ஐயா-விற்கு, தங்களின் அடிப்பொடி விடுக்கும் மடல். நலத்தை நாடுகின்-றேன். தங்களை 15-10-89 அன்று செயங்கொண்டம் ''தமிழோசை நற்பணி மன்ற'' விழாவில் கண்டு பெரிதும் மகிழ்ந்தேன். தமிழ்-நாடு அளவில் நடைபெற்ற கல்லூரி மாணவர்களுக்கான கட்டு-ரைப் போட்டியில் யான் முதல் பரிசாகத் தங்கப்பதக்கத்தைப் பெற்றேன். அப்பதக்கம் தங்கள் கையினால் அணிவிக்கப்பெற்றது எண்ணி பிறவிப்பயன் அடைந்தவனாய் மகிழ்கின்றேன். தங்களின் சொற்பொழிவு இப் பகுதி மாணவர்களுக்குத் தமிழுணர்வு ஊட்டியதாக அமைந்தது. பல மாணவர்களும் தங்களின் பொழிவை வியந்து போற்றுகின்றனர். மன்ற நிகழ்ச்சிக்கு மீண்டும் தங்களையே அழைக்கவேண்டும் என்ற கருத்து நிலவு-கிறது. அன்பின்,

—மு. இளங்கோவன், இடைக்கட்டு.

○ : 1390 : மதிப்பிற்குரிய பாவலரேறு அவர் தம் பாத மலர் கட்கு, வணக்கம்.

''தென்மொழி'',—மழலையாய் வாழ்ந்த என்னை மாந்தனாய் ஆக்கிற்று. தந்தை பாவாணர் தமிழ்த்தேன் என்னை அறிவூர்தி-யில் ஏற்றித் தமிழ்த்தாயின் மெய்ப்பாலை அருந்த வைத்தது.

என் அருள் தந்தை—கடவுள்—தூய மணிவாசக அடிகள், பாவாணர் பற்றியும், தலைமாணாக்கர் தங்கள் பற்றியும் கூறிய அருள் மொழி இது.

''உலகின் தோற்றத்தாய் தமிழே; பாவாணரும், பாவலரேறு-வும், தமிழ், உலகில் மெய்ப்பயன் பெற, உலகமெல்லாம் தமிழாய் மாற, தொண்டு செய்வர்,''

விடுதலை விரும்பி—தங்கள், ஏன், (நம் குடும்பம் உலகக் குடும்பம்) புதல்வர். திருவளர். பொழிலன் அவர்கள், இராவண-னாய்-இந்திரசித்தாய்-தமிழ்ப் போர்க்களத்தில், அனைத்து வீர விழுப்புண்களோடும் காணும் காட்சி, 'அகத்தியரையும், திருவள்ளுவரையும் வாழ்த்துக் கூறும்' என வணங்க வைக்கிறது.

—நா. வளவன், சென்னை-35.

○ : 1391 : தமிழ் நெஞ்சீர், அய்யா, வணக்கம். அறிமுக-மில்லாதவன். அச்சகம் ஒரு முறை வந்திருக்கிறேன், இசைவு பெறாமல் தங்களை நேர்காணல் நல்லதில்லை என்றெண்ணி வந்து விட்டேன். தாங்களின் இதழ்கள் (தாளிகைகள்) அனைத்தும் முறையே படித்து வருகிறேன். அவற்றைப் படிக்கும்போது துமுக்கி தேவை போல இருக்கிறது. மக்களிடம், தமிழ்க் குமு-காயத்திடம் எடுத்துக் கூறும்போது சிந்திக்க மறுக்கிறார்கள். அதற்-காகச் சலிப்படையவில்லை. தாங்கள் குமுகாயத்திற்கு ஆற்றிவரும் பணிகள் அறிவேன். இன்றைய இளைஞர் ஒட்டு-மொத்தமாகத் திரையுலகில் மற்றும் பல்வேறு மழுங்கடிப்புகளில் வயப்பட்-டுள்ளனர். அவர்களின் பாதையை மாற்றிச் சீரான ஒரு குமுகாய பணி செய்ய என்னை ஈடுபடுத்திக் கொள்ள முயன்றேன். ''பாவேந்தர் கேட்பதுபோல பிள்ளை பிறந்தேன் யாருக்காக?'' என்று நானும் கேட்கிறேன்.

தந்தை பெரியார் கூறியது போல வெற்றியா, தோல்வியா, முகாமையன்று; போராட வேண்டியதற்காக கொள்கை (இலட்சிய) முனைப்போடு போராடினோமா இல்லையா? என்பது தான் முகாமையானது.

—ஏ. நற்றேவன் (வாசுதேவன்), பனப்பாக்கம் (அம்).

Scanned with CamScanner

ஒ: 1392: அன்புள்ள பெரியவர், மானமிகு பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களுக்குப் பணிவு வணக்கம்.

தங்கள் வெளியீடுகளான தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் இதழ்கள் வெளி வருகின்றனவா என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்ற அவலுடன் இந்த மடல் வரைகின்றேன். கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு உதகை கூட்டுறவுத் தங்கல் விடுதியில் நண்பர், இரா. சாந்தன், தங்களை என்னிடம் அறிமுகம் செய்து வைத்தார். நான் ஓர் எழுத்தாளன், உங்கள் இதழ்களைப் படிக்கின்ற வாசகர்களில் நானும் ஒருவன்.

தமிழ்க் குமுகாய வளர்ச்சிக்கு உங்கள் இதழ் ஒரு போர்வாள். தமிழர்களின் நம்பிக்கை விண்மீனாகத் திகழும் தங்களின் இதழ்கள் வெளி வருகின்றனவா என்பதனை அறிந்துக் கொள்ள மிகவும் ஆவல். உங்கள் இதழ்கள் வெளி வருகின்றன என்றால் விளக்கமாகக் கடிதம் எழுதினால் நான் பணம் அனுப்பி வைக்கின்றேன். நன்றி! வணக்கம்!! இவண்.

—அரு. அமானுல்லா, உதகை.

ஒ: 1393: பெருந்தகை பெருஞ்சித்திரனார் அவர்கட்கு, ஐயா,

தந்தை பெரியாரைப் பற்றித் தங்களின் ஆய்வு, ஒப்பு நோக்குதலுக்கு அப்பாற்பட்டு மிக உயர்ந்த தரத்தில் அமைந்துள்ளது. தமிழக அரசு, அக் கட்டுரையை அப்படியே பாடநூலில் சேர்த்திடல் வேண்டும். அப்படிச் சேர்த்திடில் அது பெரியாருக்குச் செய்யும் தொண்டாக மட்டும் அமையாது, எதிர்கால தமிழ்க் குமுகாயத்திற்கு ஆற்றும் பெரும் கடமையாய் அமையும். ஆகவே, அக்கட்டுரையை அப்படியே படப்படிகள் எடுத்து நமது தொடை நடுங்கி அரசின் அமைச்சர்களுக்கு அனுப்பி உள்ளேன். நிற்க,

இந்தியத் துணைக்கண்டத்தின் அனைத்து மூலைகளிலிருந்தும் இன்று விடுதலை முழக்கங்கள் கேட்கத் தொடங்கிவிட்டன. தமிழகத்தில் அவ்விடுதலை வேட்கைக்கு அன்று வித்திட்டவர் தந்தை பெரியார். ஆயின் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்றபின் அரசியல் சட்டங்களின் அடக்குமுறைக்கு அடிமைப்பட்டுப் பதவிகளுக்கு ஆசைப்பட்டு, அரசியல் தலைவர்கள் விடுதலை முழக்கங்களை அடக்கி இசைக்கத் தொடங்கிவிட்டனர். ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளாய் வளர்க்கப்பட்ட உணர்வுகளைத் தங்கள் தந்நலம் பேண அழிக்கத் தொடங்கி, இன்று எவர் வேண்டுமானாலும் இந்த நாட்டை ஆளலாம் என்னும் நிலைக்குத் தாழ்த்திவிட்டனர்.

கடந்த இருபது ஆண்டுகள், தமிழ்இன விடுதலை வரலாற்றில் மிக இருண்ட காலம் என்பதே உண்மை.

தமிழினத்தின் போர்க்குணம் இன்னும் செத்துவிடவில்லை என்பதை இன்று உலகிற்கு உணர்த்திக் கொண்டிருப்பது ஈழமண்ணே தீவிர, தமிழகம் அன்று.

ஆயின், அன்றுமுதல் இன்றுவரை தமிழக விடுதலைதான் என் மூச்சு, நோக்கம், கொள்கை, முயற்சி என, எழுதிவருபவர் தாங்கள் ஒருவரே! நானறிந்த வரை தந்தை பெரியாரின் மறைவிற்கு பின் இன்றுவரை ஒளிவு மறைவின்றித் தமிழகவிடுதலை உணர்வினைப் பரப்பி வருபவர் தங்களைத் தவிர வேறு யாருமே இல்லை. (தொடர்ச்சி உள்ளே 8-ஆம் பக்கம்.)

Scanned with CamScanner